விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 | தை 21 | ஜ. அவ் 23 | இதழ் 357
யாழ்ப்பாணம் | திங்கட்கிழமை | 3-2-1986

முல்லைத்தீவில் கடத்தப்பட்ட

## பிரிட்டிஷ் பெண்

### வெளியிட்ட தகவல்

[ஐ. சண்முகலிங்கம்]

''இவ்வருடம் செப்டம்பர் மாதத்துக்குள் வெற்றிகண்டு விடுவோம் என்ற நம்பிக்கையுண்டு. எமது இராணுவம் ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை ஒப்புக்கொள்ளுகிறேன். வடக்கு-கிழக்கு மாகாணங்கள் குழப்ப நிலையில் இருக்கின்றன. வட பகுதி எமது சட்டுப்பாட்டை இழந்துள்ளது. இவற்றைச் சீரமைக்க உங்களைப் போன்றவர்களின் ஆலோசனைகள் எமக்கு அவசியம் என்று அமைச்சர் லலித் அத்துலத்முதலி என்னிடம் கூறினார்.''

இவ்வாறு 'ஈரோஸ்' அமைப்பு இம்மாதம் பதினேழாம் திகதி முல்லைத்தீவு நகரில் வைத்து அழைத்துச்சென்ற பிரிட்டிஷ் பெண்ணை திருமதி வில்லிஸ் பெனிலோப் [வயது 64] தெரிவித்துள்ளார்.

'ஈரோஸ்' அமைப்பினராகிய எமது விசாரணையின்போது அவர் இவ்வாறு கூறினார்என்று 'ஈரோஸ்' அமைப்பு நேற்றுப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள

[5ம் பக்கம் பார்க்க]

# ரொமேஷ் விஜயம் திடீர் ஒத்திவைப்பு!
# தமிழ்அமைப்புக்களுடன்தனியாக ஆலோசனை

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னை சம்பந்தமான பேச்சுக்களை மீண்டும் தொடர இன்று இலங்கை வரவிருந்த இந்திய வெளியுறவுச் செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியின் விஜயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலைதீவுக்கு விஜயம்செய்வதற்குத் திட்டமிட்டிருப்பதால் அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டியிருப்பதால் நான் இலங்கை விஜயத்தை ஒத்தி வைத்ததாக திரு. ரொமேஷ் பண்டாரி தெரிவித்தார்.

இலங்கைஅரசுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு வசதியான திகதிபற்றித் தெரிந்து கொண்ட பின்னர் தமது இலங்கை விஜயத்திற்கான திகதி நிர்ணயிக்கப்படும் என்றும் திரு. பண்டாரி தெரிவித்தார்.

திரு. ரொமேஷ் பண்டாரி நேற்று தமிழ்ப் போராளிகள் குழுக்களுடன் சென்னையில் ஆலோசனை நடத்தினார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ தேசிய விடுதலை முன்னணி ஆகிய அமைப்புக்களோடு அவர் தனித்தனியே ஆலோசனை நடத்தினார்.

தமிழ்நாடு மின்துறைஅமைச்சர் திரு. எஸ்.ராமச்சந்திரன், வெளியுறவு துணைச் செயலர் ரஞ்சன் மத்தாய் ஆகியோரும் இப்பேச்சுக்களில் கலந்து

[5ம் பக்கம் பார்க்க]

# ஹட்டனில் 33மணி நேர ஊரடங்கு!
# கடைகள், வீடுகள் தீக்கிரை!

(கொழும்பு)

**ஹட்டன், பொகவந்தலாவ, நோர்வூட், மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் மீண்டும் வன்முறைச் சம்பவங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஹட்டனில் கடந்த இரவு 9-00 மணி தொடக்கம் நாளை அதிகாலை 6-00 மணி வரைக்கும் ஏனைய மூன்று பகுதிகளில் இன்று காலை 6-00 மணி தொடக்கம் நாளை காலை 6-00 மணி வரைக்கும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும்.**

ஹட்டன் பகுதியில் உள்ள 'காமினிபுர' என்ற இடத்தில் சில வீடுகள் எரிக்கப்பட்டன. இதன்பின்னர் ஹட்டன் மார்க்கட்டில் சில கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. வீடுகள் எரிக்கப்பட்டதற்குப் பதிலடியாகவே கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதாகக்கூறப்படுகிறது.

ஹட்டனில்ஏற்பட்ட பதற்ற நிலைமைபற்றி இ.தொ.க.செயலாளர் திரு.எம்.எஸ். செல்லச்சாமி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியுடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து ஊரடங்குச்சட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம் பொகவந்தலாவ பகுதியில் உள்ள ஆரியபுர, சிறிபுர ஆகிய கிராமங்களில் பதினொரு வீடுகள் எரிக்கப்பட்டதாகவும், இரு வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டது.

இதேநேரத்தில் தோட்டத் தொழிலாளர்கள் வழக்கம் போல் இன்று வேலைக்குச்செல்வார்கள் என்று இ. தொ. க. வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. [ய]

## "அதிரடிப்படை முகாம் தருமபுரத்தில் அமைப்பு"

[கொழும்பு]

தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த தருமபுரத்தில் அதிரடிப் படைகளின் ரோந்து நிலையம்ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

(5-ம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு தர்மபுரம்: தொடர்ந்து பதற்றநிலை!

(கே.வி.கே. திருலோகமூர்த்தி)

வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, தர்மபுரம் முதலான பகுதிகளில் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று கிளிநொச்சியில் ஊரடங்கு அமுலில் இருந்த வேளை பெருவாரியான இராணுவத்தினர் கிளிநொச்சிக்கு விமானங்கள் மூலம் அழைக்கப்பட்டதாகவும், இவர்கள் கல்மடுப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருக்கு உதவியாகச் சென்றதாகவும் தெரியவருகிறது.

வட்டக்கச்சிப் பகுதியில் விமானத் தாக்குதல் தொடர்ந்து நடத்தப்பட்டதால் சில்வா வீதிக்கு சமீபமாக நேற்று சகோதரர்களான

(5-ம் பக்கம் பார்க்க)

## மன்னார் சம்பவம்: இலங்கை அரசு மறுப்பு

[கொழும்பு]

மன்னாரிலுள்ள பரப்பாங்கண்டல் என்ற இடத்தில் கடந்த மாதம் 29ம் திகதி நடைபெற்ற மோதலில்தமிழ்ப்போராளிகள் 16 இலங்கைப் பாதுகாப்புப் படையினரைக் கொன்றனர் என்ற செய்தியை இலங்கை அரசாங்கம் மறுத்துள்ளது.

[5ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதியை கொலைசெய்ய முயன்றார்களாம்! இருவர் கைது!

[கொழும்பு]

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவை கொலை செய்ய கூலிக்கு அமர்த்தப்பட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கடந்த வியாழக்கிழமை இரவு இரு இந்தியர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இத்தகவல் 'நேற்று முன்தினம் வெளியான 'இந்து' பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருசாமி செட்டியார் ராசு, அண்ணாமலை பெரிய கருப்பு

(5-ம் பக்கம் பார்க்க)

## 60 பேர் பலி?
### இன்றும் ஊரடங்கு

[கிளிநொச்சி]

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற தாக்குதல்களில் அறுபது பேர் பலியாகியிருக்கலாமென்றுஅஞ்சப்படுகிறது.

கிளிநொச்சியில் ஊரடங்கு சட்டம் இன்று மீண்டும் காலை பத்து மணி முதல்' மாலை ஆறு மணிவரை அமுலில் இருக்கும்.

## பொலிஸ் அதிகாரி சடலம் புதருக்குள் மீட்பு!
### மூன்று பொலிசாரை காணவில்லை!

(கொழும்பு)

அக்கரப்பத்தனையில் பொலிஸ் சுப்பிரின்டன் பிரியாந்த டி சில்வாவின் சடலம் புதர் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டது.

சடலம் பல இடத்தில் வெட்டப்பட்டிருந்ததாம்.

இப்பகுதியில் கடமையிலிருந்த மூன்று [illegible] காணவில்லை என [illegible] கிறது. [ய]

## எண்மர் படுகாயம்

(கொழும்பு)

முல்லைத்தீவில் ஹெலிக் [illegible] மண்டைந்தனர். (ய)

## மட்டக்களப்பு: 50 பேர் கைது பலர் விடுதலை

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பிலுள்ளமாமாங்கம் என்ற இடத்திலுள்ள கொலனியொன்றில் இராணுவம் சுற்றிவளைத்து நடத்திய தேடுதல் வேட்டையில் 50 பேர்

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஆண்டு 2, மாணவர் மதிப்பீடு பாடசாலைக்குத் தேவையான படிவங்களை எம்மிடம் பெறலாம். ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-455

கலர் என்லாச்சர் Durst M. 370 ரைமர் T. M. 60, அனலைசர் C 300, டெவலப்பிங்ராங் போன்ற பல புதிய பொருட்கள் உடன் விற்பனைக்குண்டு. விளம்பர இல. C 468, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 468]

கல்வளை, சண்டிலிப்பாயில் குடியிருப்பதற்குகந்த 12 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்: S. செந்தில்நாதன், தர்மா விவசாயக் களஞ்சியம், மருதனுமடம் சந்தி, மருதனுமடம். [C476]

வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்பட்ட புதிய கென்வூட் குளிர்சாதனப் பெட்டியும், ஜெஸ்ட்னர் போட்டோ ஸ்ரட் மெசினும் உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: கிளாஸ் கவுஸ், 182. கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி. 22101 [C 482]

நல்ல நிலையில் உள்ள A. 35 கார் 2 Sri 3000 தொடர் இலக்கம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும் ஏரம்பு - தவசோதி 131/1 அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C 492]

பாலர் கல்விக்குப் பயன் தரும் நூல்கள்;- பாலர் தமிழ் [1], பாலர் தமிழ் [2], செயல் நூல், பாலர்தமிழ்[அரிச்சுவடி] பாலர் பாட்டு, பாலர் நீதிக் கதைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம். C-456

பண்டத்தரிப்பு சந்தைக்குச் சமீபமாகச் சகல வசதிகளும் உடைய புதிய வீடும் 6½ பரப்பு வளவும் உடன் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும்: கு. நம்பிராசா, வர்த்தகர், பண்டத்தரிப்பு. C 478

நல்ல தண்ணீர், மின்சாரம், போக்குவரத்து வசதி, சகல பிரயோசனங்களும் உள்ள வீடு எட்டுப் பரப்பு ஏழுகுழி காணி மலிவு விற்பனைக்குண்டு. தொழிற்சாலைக்கு மிகவும் ஏற்றது. வ. சி. இராசையா, வடலிஅடைப்பு, பண்டத்தரிப்பு. C 514

பனைகள் நிறைந்த பிரயோசனம் பெறக்கூடிய பத்துப் பரப்புப் பனங்காணி திக்கம் கடற்கரை சந்தியிலிருந்து கால்மைல் தொலைவில் உள்ளது. பூபாலரட்ணம், ரஞ்சனு தியேட்டர்அருகாமை, மே/பா கணேசர் செல்லம்மா, வல்வெட்டி. [C 475]

பரந்தன் சந்தியில் கடைகள் கட்டக்கூடிய காணி வீடு, கிணற்றுடன்விற்பனைக்குண்டு. கர்த்தர் - நடனசுவா மன்றம், பரந்தன் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். C 512

சோனி 2032 Mark புதிய T. V. நஷனல் 200 W. செற் விற்பனைக்குண்டு. தொடர்பு: 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். (C 516)

## தேவை

Carpentry Workshop Supervisor நவீன தளபாட உற்பத்தியில் கைதேர்ந்த தச்சுவேலைத் தொழிலாளர் தேவை. நேரில் வரவும். United Engineers சாயி மர அரிவு ஆலை, 91 ராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். [C 503]

மின்தறியில் அனுபவமுள்ள தொழில்நுட்ப வியலாளர்களும், நெசவாளர்களும் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் C 517 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 517

ரியூற்றறி வாங்கு மேசைகள் தேவை. ஓமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். C-491

## தவறிவிட்டது

இல. 502864750 V. Dr. க. இராஜநாயகம், 9, செட்டித்தெரு, நல்லூர் என்பவருடைய அடையாள அட்டை 30-01-86 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 518

28-01-86 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவு சென்ற மினிபஸ்ஸில் கனகசபை தர்மசீலன் என்பவரின் க. பொ. த. உயர்தர பத்திரமும், திருமதி அன்னப்பிள்ளையின் அடையாள அட்டையும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் ஒப்படைக்கவும்: கா. கனகசபை, அதிபர், புங்குடுதீவு-6 தகுந்த சன்மானம் வழங்கப்படும். C 515

## மணப்பந்தல்

யாழ்ப்பாணம் இந்து வேளாள பெற்றோர் 29 வயதுடையவரும் லண்டனில் B,Sc. (Civil Eng.) சித்தியடைந்து அங்கு தொழில் புரிபவரும், U. K. நிரந்தரக்குடியுரிமை பெற்றவருமான தங்கள் மகனுக்கு அதேகுலத்தைச்சேர்ந்த I. C. M. A. (full), Vet. Sc,, B. D. S., M.B.B.S. தராதரமுள்ள மணமகளைத் தேடுகிறார்கள். சாதகக்குறிப்பும் முழு விபரங்களுடனும் தொடர்பு கொள்க: C/o 30/2, நிக்கிலஸ் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (C 519)

## காங்கேசன் சம்பவம் மிலேச்சத்தனமானது

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்து ஆலை சம்பவத்தை கீரிமலை பிரஜைகள்குழு வன்மையாக கண்டித்துள்ளதுடன் இவ்வாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் இனியும் இடம் பெறுமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென பிரதமர் தேசிய பாதுகாப்பு அமைச்சர் ஆகியோருக்கு கோரிக்கைவிடுத்துள்ளது.

பிரஜைகள்குழுத் தலைவர் திரு க. சுந்தரமூர்த்தி மேற்படி சம்பவம் குறித்து விடுத்துள்ள மகஜரிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவஞ்சலி



அமரர்
வேதநாயகம்
சந்திரகுமார்
(பத்தாவத்தை இளவாலை)
தோற்றம்: 12-7-1945
மறைவு: 4-1-1986

எங்கள் அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து இன்றுடன் 31நாட்கள் ஆகின்றன. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் அன்பு நினைவு என்றும் எம்மைவிட்டு நீங்காது. உங்கள் ஆன்ம இளைப்பாற்றுக்காக அன்னை வேளாங்கண்ணி மாதா கோவிலில் திவ்விய பூசைப்பலி மாலை நான்கு மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

உற்றார், உறவினர், அன்பர்களை அழைக்கின்றோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், பெற்றோர்,
சகோதரர்கள்,
மைத்துனர்.
C 526

## 75-ம் நாள் நினைவஞ்சலி

செல்லையா
பேரின்பராஜா
(இன்பம்)



தோற்றம:
14- 7- 1954
மறைவு:
23- 11- 1885

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 5- 2- 86 புதன் கிழமை அவரது இல்லத்தில்நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியைகளிலும், அடுத்து நடைபெறும் வீட்டுக்கிரித்தியங்களிலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

திருமதி
வே, த. செல்லையா
(தாயார்)
சகோதரர்கள்.
ராஜகிரி',
புளியங்கூடல்,
ஊர்காவற்றுறை.
(C-522)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் கதிர்காமர்
வேலாயுதபிள்ளை



தோற்றம்:
1916- 08-26
மறைவு:
1986- 01-05

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 86- 02-04 செவ்வாய்க்கிழமை மதியம் வீட்டுக் கிருத்தியம் நடைபெறுவதால், அனைவரையும் கலந்து பிரார்த்தித்து. மதிய போசனத்திலும், பங்கு கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மனைவி, மகன்.
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(C- 523)

## நன்றி நவிலல்

திருமதி
வள்ளியம்மை

காலஞ்சென்ற திருமதி வள்ளியம்மை செகராச சுப்பிரமணியம் அவர்களின் இறுதி நாட்களில் பலவகைகளிலும் பேருதவி புரிந்த உறவினர், அயலவர், நண்பர்கள், டாக்டர் கந்தசாமி அவர்களுக்கும் 19- 01- 86 ஞாயிறு அன்னார் இறைவனடி சேர்ந்தவுடனும் ஈமக்கிரியைகளிலும் ஒத்தாசை புரிந்துதவிய அயலவர்கள், உறவினர்கள், நண்பர்களுக்கும், நேரிலும் செய்திகள் வாயிலாகவும் எமக்கு ஆறுதலளித்துதவிய அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கணவர்: ச. செகராச சுப்பிரமணியம் (சோதிடர்).
மகன்; சிவப்பிரகாசம் (அஞ்சலதிபர் நெடுந்தீவு).
மருமகள்: இரத்தினம்பிகை சிவப்பிரகாசம்.
மகள்: திருமதி சரோஜினிதேவி சுந்தரலிங்கம் (தலைவர், நெல்லியடி ம. ம. வி. மகளிர்பிரிவு).
செல்வி: ஜெகதாதேவி.
பேரப்பிள்ளைகள்: கோமதி, ஹரன், சுமந்திரன், நிரஞ்சனன்.

நவிண்டில்,
கரணவாய் வடக்கு,
கரவெட்டி. (C 511)

## பொதுச் சந்தை திறப்புவிழா

(மானிப்பாய்)

கொக்குவில் மேற்கு பிரஜைகள் குழுவின் 16ம் வட்டார அமைப்பின் முயற்சியால் ஆனைக்கோட்டை ஆறுகால் மடத்தருகாமையில் பொதுச் சந்தையொன்று திறந்துவைக்கப்பட்டது.

## முல்லைத்தீவுத் தொடர்பில்லை

(முல்லைத்தீவு)

யாழ்ப்பாணம் - முல்லைத்தீவுக்கான போக்குவரத்துச் சேவை கடந்த மூன்றுதினங்களாகப் புதுக்குடியிருப்பு வரையே நடைபெற்றுவருகின்றது. புதுக்குடியிருப்புக்கும் முல்லைத்தீவுக்குமிடையே எவ்விதத் தொடர்பும் இல்லாமல் இருப்பதாக அறியப்படுபடுகின்றது. (கெ)

## இந்துமாமன்ற அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தில் இந்து மாமன்ற அங்குரார்ப்பணம் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

கோப்பாய், இருபாலை, ''லிங்கஸ்தான்'', காலம்சென்ற சின்னத்துரை அமிர்தலிங்கம் என்பவரது மரணச் சொத்தின் விடயத்தில்
— மரணமெய்தியவர்.

மரணசாதன
நியாயாதிக்கம்
இல: ரி/3933

சின்னத்துரை அமிர்தலிங்கம் கைம்பெண் கமலாவதி, ''லிங்கஸ்தான்'', இருபாலை, கோப்பாய்.

மனுதார்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலேபெயர் குறிப்பிட்டதுமான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ந் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும்இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு கார்த்திகை மாதம் 18 ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைதல்:

சி. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணி.
C 527

ஹோம் பிறுன்ஸ் லிமிட்.,
புதிய மோஸ்தர் துல்ஷிரிய பிடைவைகள்
சிறிய தொகை வந்துள்ளது என்பதை
எமதுவாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.
ஹோம் பிறுன்ஸ்
லிமிட்டெட்,
82, கன்னுதிட்டி றோட், யாழ்ப்பாணம்.
(A46)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதக்குவிப்பு மனித குலத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைகிறது

## இந்தியாவில் பாப்பரசர் கவலை

புதுடில்லி, பெப். 12

''மனித குலத்துக்கு பேரழிவை ஏற்படுத்தக் கூடியபெருமளவிலான ஆயுதக்குவிப்புகள் அனைவருக்குமே ஆழ்ந்த கவலையை அளிக்கிறது'' என்று பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல் கவலை தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் பத்துநாள் விஜயம் மேற்கொண்டிருக்கும் பாப்பரசர் நேற்றுமுன்தினம் 'ராஜ்காட்டில்' அமைந்துள்ள மகாத்மா காந்தியின் சிலைக்கு அஞ்சலிசெலுத்திய பின்பு நடைபெற்ற பொதுவைபவமொன்றில் பேசுகையிலேயே இவ்வாறு கவலை தெரிவித்துள்ளார்.

உலகச் செய்திகள்

தொடர்ந்து அங்குபேசிய பாப்பரசர் ''உலகில்தொடர்ச்சியாக நிலவிவரும் வறுமை பசி, பட்டினி நோய் ஆகிய இவைகள் இன்னமும் அகற்றப்படவில்லை. ''மனித சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகள் ஒரு சிலருக்கு பெரும் நன்மைகளை விளைவிக்கும் அதேவேளை ஒருபெரும் பகுதியினரை மீளமுடியாத துன்பத்தில் ஆழ்த்துகிறது. இந்நிலையில் உலகஅமைதிக்கு எப்போதுஊறுஏற்படும் என்ற அபாயம் உருவாகியுள்ளது.

''உலகில் காணப்படும் சகல விதமான வேறுபாடுகளும் ஒழிக்கப்படவேண்டும் என்ற மகாத்மாகாந்தியின் கொள்கையை மெய்யானது என நாம் உணருகிறோம். உலகத்துக்கு சத்தியத்தைப் போதித்த மகாத்மாகாந்தியின் அறிவுரைகளை பின்பற்றுவதன் மூலம் தான் உலகில் சமாதானத்தையும், நீதியையும் நாம் தோற்றுவிக்க முடியும்'' என்றும் தெரிவித்தார்.

தமது இந்தியப் பயணம் நல்லெண்ண பயணமாகும் என்று கூறிய அவர் அஹிம்சாதூதரான மகாத்மாகாந்தியின் சமாதி அமைந்துள்ள ராஜ்காட்டில் தமது பயணம் துவங்குவது சாலப்பொறுத்தமானது என்று கூறினர்.

பாப்பரசர் தமது உரையின் போது சிலசமயங்களில் ஹிந்தி மொழியில்பேசியதுடன் உரையின் முடிவில் ''மகாத்மா வாழ்க''என்றும்கூறினர் (ரா)

## ஐரோப்பாவில் பனிப்புயல் 9 பேர் பலி

(லண்டன்)

ஐரோப்பாவின் தென்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்றுவரும் பனிப்புயல், வேகமான காற்று இவைகளால் ஒன்பதுபேர் பலியாகியுள்ளனர்.

தென்கிழக்கு பிரான்சின் நான்குபகுதிகளில் நெருக்கடிநிலைமை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பனிப்புயலின் காரணமாக தொலைபேசி, மின்சார தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளும் பனிப்புயல், பனிப்பாறைச்சரிவு ஆகியவற்றால் பெரிதும் பாதிப்படைந்துள்ளன, [ரா]

## யாழ். கல்விப்பணிப்பாளராக சுந்தரலிங்கம் நியமனம்

[யாழ்ப்பாணம்]

யாழ். கல்வித்திணைக்களத்தில் பிரதம கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய திரு. ஆர். சுந்தரலிங்கம் யாழ். மாவட்ட கல்விப்பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கல்வி அமைச்சின் செயலாளரினல் இவருக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. மார்ச்மாதம் முதலாம் திகதி முதல் யாழ் கல்விப்பணிப்பாளராகக் கடமைபுரிவார்.

திரு. ஆர். சுந்தரலிங்கம் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை அத்தியட்சகராகவும் கல்விவெளியீட்டு திணைக்களத்தின் பிரதம பதிப்பாசிரியராகவும் முன்னர் பணிபுரிந்தவராவார். கலை, விஞ்ஞான பட்டதாரியான இவர், கொழும்பு பல்கலைக்கழக டிப்ளோமா பரீட்சையில் உயர்தரத்தில் சித்தி அடைந்தவருமாவார்.

''இலங்கை சுதந்திரம் அடைந்தபின்னர். மாணவர் கல்வி வாய்ப்பில் சமமின்மை'' என்ற தலைப்பில் அரிய ஆய்வினை தற்போதுமேற்கொண்டு வருகிருர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

யாழ். கல்விப்பணிப்பாளராக இப்பொழுது திரு. ம. சிமியாம்பிள்ளை கடமையாற்றுகிருர். [ஐ]

## எண்ணெய் விலை குறைப்பு

[மெக்சிக்கோ சிற்றி]

மெக்சிக்கோவும், வெனிசுலாவும் தாம்ஏற்றுமதி செய்யும் மசகு எண்ணையின் விலையை பீப்பா ஒன்றுக்கு 4 டொலர் வீதம் குறைக்க முடிவுசெய்துள்ளன.

சென்றமாதம் 1ம் திகதியிலிருந்து இந்த விலைகுறைப்பு அமுலில் இருக்குமென இருநாடுகளும் அறிவித்துள்ளன. [ரா]

## தென்னுபிரிக்காவில் பயணிகள் ரயில் விபத்து 39 பேர் மரணம்

(கேப்டவுன்)

தென்னுபிரிக்காவில் ஏற்பட்ட ரயில் விபத்தொன்றில் 39பேர் பலியாகியுள்ளதுடன், 70பேர் படுகாயமடைந்துள்ளனர்.

டர்பன் நகருக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த விபத்து நடந்துள்ளது. இரண்டு பயணிகள் ரயில்கள் மோதிக்கொண்டதின் மூலமே இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்பட்டது.

வெள்ளையரல்லாதவர்கள் சென்றுகொண்டிருந்த பயணிகள் ரயில் போர்மோஷல் நகரக் குடியிருப்பை நோக்கி சென்றுகொண்டிருக்கையில் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்த இன்னுமொரு பயணிகள் ரயிலின் பின்புறத்தில் இந்த ரயில்மோதியதாக கூறப்பட்டது. (ரா)

## ''தமிழ்மக்களின் அடிப்படை பொருளாதார வளம் கல்வியே''

(யாழ்ப்பாணம்)

''தமிழ்மக்கள் தமது பொருளாதாரவளமாக கல்வியையே அடிப்படையாகக் கொண்டுள்ளனர். இந்த வகையில் ஒவ்வொருபிள்ளையும் கல்வியை சீராகப்பெறுவதற்கு கிராமப்புறங்களிலுள்ள பாடசாலைகளின் வளர்ச்சி மிகவும் கவனிக்கப்படவேண்டியதொன்ருகும்''.

இவ்வாறு வட்டு.பிலவத்தை அமெரிக்கன்மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் அபிவிருத்திச்சபைக்கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய பாடசாலை அதிபர் திரு. கி. தாமோதரம் பிள்ளை கூறினர்.

பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பெற்றோர்கள், பழையமாணவர்கள், பொதுமக்கள் உட்பட பெருந்திரளானோர் கலந்து கொண்டனர்.

பாடசாலை அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்: பாடசாலையின் வளர்ச்சியில் அபிவிருத்திச் சங்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கியதோடு இன்றைய சிறுர்களே நாட்டின் நாளைய தலைவர்கள் என்பதை உணர்ந்து மாணவர்களை சிறந்த நற்பிரஜைகளாக மிளிரச் செய்வதற்கு அபிவிருத்திச் சங்கமும் தமது பங்களிப்பை வழங்கவேண்டுமென்ருர்.

திரு. இ. கு. சிவஞானம்பேசுகையில்: ''இன்றைய சூழ்நிலையில் தமிழ் மக்களின் கல்விக்கு பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. மாணவர்கள் தமது கல்வியை சிறந்த முறையில் கற்பதில் பல்வேறு சங்கடங்களை எதிர் நோக்கியுள்ளனர்'' என்ருர்.

சட்டத்தரணி மு. கதிர்காமநாதன், டாக்டர் கி. வரதராசன், திரு. வ. தயாபரசிவம் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

அபிவிருத்தி சபையின் நடப்பாண்டிற்கான உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: கி. தாமோதரம் பிள்ளை, செயலாளர்: இ. கு. சிவஞானம், உபசெயலாளர்: சட்டத்தரணி மு. கதிர்காமநாதன், பொருளாளர்: வே. சச்சிதானந்தம்பிள்ளை, நிர்வாக உறுப்பினர்களாக டாக்டர் கி. வரதராசன், ந. அச்சுதானந்தன், மு. ச. மா. தாசன், செ. விக்கினேஸ்வரன், க. வரதராசா ஆகியோர் நியமிக்கப்பட்டனர். (ச)

## இருவர் விடுதலை

(வவனியா)

கடந்த வியாழனன்று வவனியா சின்னப்புதுக்குளம் என்ற பகுதியில் கைதுசெய்யப்பட்ட எட்டுப்பேரில் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சந்திரகுமார், தனபாலசிங்கம், சிறீதரன், சந்தசாமி, சிவகணேஷ், மோகன், அருள்நேசன், சுரேஷ் ஆகியோரே திருமணவீடொன்றில் அலங்கரிப்புவேலையில் ஈடுபட்டிருந்த சமயம் கைதானவர்களாவர். இவர்களில் சிவகணேஷ், மோகன் இருவரும் [illegible] விடுதலை செய்யப்பட்டனர்.

## ''பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இஸ்ரேல் தாக்குதலை கண்டிக்கிறோம்''

### இஸ்லாமிய மக்கள் முன்னணி கருத்து

(யாழ்ப்பாணம்)

''பாலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் தொடர்ச்சியான பயங்கரவாத நடவடிக்கைகளையும், ஜெருசலேம் அல் - அக்சா பள்ளிவாசல் தாக்கப்பட்டதையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.'' என்று யாழ்ப்பாணம் இஸ்லாமிய மக்கள் முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; ''சியோனிச இஸ்ரேலியர்களின் காட்டு மிராண்டித்தனமான நடவடிக்கைகளால், பாலஸ்தீன மக்கள் தாக்கப்பட்டு, சீரழிக்கப்பட்டு அகதிகளாக பல நாடுகளில் நிம்மதியற்று வாழ்ந்து வருகின்றனர். வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் என்ற பேதமின்றி இஸ்ரேலிய இரத்தவெறியர்களினுல் அன்ருடம் கொல்லப்படுகின்றனர். பாலஸ்தீன மண் பிணக்காடாக்கப்பட்டு வருகிறது.

ஜெருசலேம் அல் - அக்சா பள்ளிவாசல் தாக்கப்பட்டதையும், பாலஸ்தீன அரபு மக்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்டு வரும் இஸ்ரேலியர்களின் பயங்கரவாத நடவடிக்கைகளையும், சர்வதேச ரீதியில் பயங்கரவாதத்தை வளர்த்து வரும் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளின் நடவடிக்கைகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

உலகம் முழுவதும் உள்ள மக்களால் வெறுக்கப்படும் இந்த சியோனிச யூத வேதவாதிகளுக்கு சர்வதேச பயங்கரவாதிகளான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நவீனரக ஆயுதங்களை வழங்கி முழு அரபுலகிலும் பயங்கரமான அழிவை ஏற்படுத்தி வருகின்றனர்.

அரபுலகை திட்டமிட்டு அழிக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள சர்வதேச பயங்கரவாதிகளான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஓர் ஆயுதமே சியோனிச இஸ்ரேலிய ரொபோக்களாகும்.

உலக முஸ்லிம்கள் அனைவரினதும் புனித தலமான மஸ்ஜிதுல் - அக்சாவை ஆக்கிரமித்தவர்கள் இப்போது தாக்கவும் தொடங்கி விட்டார்கள். பாலஸ்தீனமக்களின் போராட்டத்திற்கு சாத்வீகரீதியான பூரண ஆதரவை வழங்குகின்ருேம்.'' (ஐ)

## ஆற்றலுறு தலைவன் அண்ணு!

மதுமலரின் தேனலையில் மயங்குமிசை வண்டெனவே
முத்தமிழோ டுறவாடி மெருகிட்டாய் இங்கெதிலும்
புதுமைமணம் பரவியெங்கும் புரையோடும் தீயவையும்
புயலிடையே சருகுகளாய் போய்மறையுங்கால
மென்றே
அதுவரையும் பயணத்திற் இமயமெனப்பகைப் பெருந்தீ
எரிந்தாலும் நந்தமிழர் எழுச்சிகாணச் சாவென்ன
எதுரிவனுந் தாங்குமொரு இதயந்தான் வேண்டுமென்றே
ஆற்றலுற தலைவனெங்கள் அண்ணுவின் பேர்வாழி

★ ★ ★

செகத்திலே நீதிக்கோர் சிம்மாசனமளித்து
சிறுமைதனைக் கண்டுமனஞ் சலியாமற் தமிழ்மறைதான்
வகுத்தநெறி கற்றுணர்ந்து வருந்தியுழைத் தேங்குபவர்
வளம்பெறவே நேர்மையெனும் வாளேந்திச்சமர்புரிந்தாய்
[illegible]த்தறிவின் தூதுவனைப் புற்றரவாஞ் சாதியினைப்
பலிகொள்ளக்கனமெறிந்த படைக்கலமாய்
வாழ்ந்துறிவைத்
தொகுத்தெடுத்து அரசியலிற்றூய்மையினைக்கண்டவனே!
தமிழினிக்கும் நாள்வரைக்குந் தாரணியில் நீ வாழ்வாய்.

பாஷையூர் மு. சிங்கராயர்

[illegible] நினைவுதினம்]

## கிளிநொச்சி கண்டிவீதி தடை?

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ பொலிஸ் கூட்டு முகாமூடாக வாகனங்கள் செல்வதற்குத் தடைபோடப்பட்டுள்ளது. தற்காலிக பாதுகாப்புக் கருதி இது போடப்பட்டுள்ளது. வீதியின் இருபுறத்திலும் 'போக்' போடப்பட்டு வீதி தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கையால் கொழும்பு—யாழ்ப்பாணம் லொறிகள் காட்டுப்பாதைகளால் போக்குவரத்துச்செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (கெ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

துன்பமென்னும் தீயில் புனிதமடையாத நாடு எதுவும் உயர்ச்சியடையவில்லை; எவ்வளவுக்கெவ்வளவு துன்பம் உண்டோ அவ்வளவுக்கவ்வளவு முன்னேற்றம் உண்டு.

—மகாத்மாகாந்தி

## நமது நோக்கு

# ஜனாதிபதிகள் இருவருக்கு சோதனைமிகுந்த காலம்

தென் ஆபிரிக்காவும், வடஇலங்கையுமே உலகச் செய்திகளில் பிரபலம் பெற்று வருகின்றன.

தென்ஆபிரிக்க ஜனாதிபதியைத்திட்ட என்றும் தயாராயிருக்கும் கறுப்பினமக்களுக்கு, ஒரு நற்செய்தி கிடைத்திருப்பது போல் தெரிகிறது.

'இனஒதுக்கல் கைவிடப்பட்டது' என்று திரு. போத்தா இலகுவில் சொல்லமாட்டார்; இருப்பினும் அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அங்குரார்ப்பண வைபவத்தில், சீர்திருத்த ஆலோசனைகள் வழங்கியதோடு, கறுப்பின மக்களைபேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டுமென்றும் கூறியிருக்கிறார். முன்னொரு போதுமில்லாத தொனியில் பேசியிருப்பதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

கறுப்பினத் தேசியவாதத் தலைவர் நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்வது பற்றியும், கறுப்பின மக்களை கட்டுப்படுத்தும் சட்டங்களை நீக்கிவிடுவதாகவும் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒன்று சொல்லவேண்டும்; ''இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷார் அந்நிய ஆட்சி நடத்தினர்'' என்று சொன்ன மகாத்மா காந்தி, தென்ஆபிரிக்காவில் நிறவேறுபாடு இருந்த போதும், அதற்கமைய சட்ட நிர்வாகத்தில் பாகுபாடு கிடையாது என்று வற்புறுத்தியிருந்தார், காரணம் தென்ஆபிரிக்காஅங்கு வதியும் வெள்ளையருக்குத் தாய்நாடு; இந்தியா பிரிட்டிஷாரின் குடியேற்றநாடு.

மகாத்மா காந்தியின் விளக்கத்தைநாம்அசட்டை செய்வதற்கில்லை. இனவெறி ஆட்சிக்கு தென்ஆபிரிக்கா பேர்பெற்றாலும், ஆட்சியாளர் எவரோ-அன்று ஜெனரல் ஸ்முற்ஸ் இன்று போத்தா- வெட்டு ஒன்று துண்டு இரண்டாகத்தான் நிர்வாகத்தை நடத்துபவவர்கள்.

'இனஒதுக்கல்' என்ற புற்றுநோய் எவ்வளவு தூரம் பரவியிருப்பதை அந்நாட்டு மக்களே அறிவார்கள்.

முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் போத்தாவைப்போல் வெள்ளைக் கொக்காகுமென, ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இலகுவில் நம்பப்போவதில்லை.

கெரில்லா இயக்கத்தில் நம்பிக்கை கொண்ட மக்கள் முன்வைத்தகாலை இலகுவில் பின்வைக்க மாட்டார்.

அதேசமயம் தென்ஆபிரிக்காவில் நிகழ்ந்த, நிகழும் அட்டூழியங்களை அனைத்துலகும் கண்டித்திருக்கிறது. உலக சமுதாயத்தில் இந்த நாட்டை ஒதுக்கிவைக்க வேண்டுமென்ற அளவிற்கு வெறுப்பும் எதிர்ப்பும் அதிகரித்திருக்கிறது.

தென்ஆபிரிக்க ஜனாதிபதி போத்தாவிற்கு எத்தகைய நெருக்கடியோ அதே போன்ற நெருக்கடி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கெனலாம்.

இன்று உச்சநிலை அடைந்திருக்கும் நெருக்கடிக்கு வித்திட்டவரை நினைவுகூர்வது அவசியமாகிறது.

''தன்னைத்தான் வென்றவன் ஆயிரம் வீரர்களை வென்றவனைவிட மேலானவன்'' என்ற புத்தபெருமானின் மகாவாக்கியத்தை உச்சரித்துக்கொண்டு ஐ. தே. கட்சியைவிட்டு வெளியேறிய அமரர் பண்டாரநாயக்காவையே நாம் குறிப்பிடுகிறோம். 1956ல் ஒரு அமைதிப் புரட்சியை ஏற்படுத்தியவர் அவர் என்று கொள்ளப்படுகிறது.

அவருடைய தனிச்சிங்களச்சட்டம், இன்றைய தமிழ்த்தேசியத்தின் தந்தை எனலாம்.

தன்னைத்தான் வென்றுவிட்ட ஞானநிலையில் உருவான பண்டாரநாயக்க ஆட்சி தமிழ்த்தேசியத்தை மட்டுப்படுத்த முயன்ற காலத்தில், தலைவர் அகால முடிவுக்கு ஆளானார்.

இலங்கையின் முதற் பிரதமர் டி. எஸ். இலங்கைத் தமிழருக்கு ஒரு தனித்துவ திட்டம் வகுக்க எண்ணியிருந்தாரயின் அது அவருடைய குதிரையால் தடைப்பட்டது.

இந்த நாட்டின் மன்னன் யார்? பண்டாரநாயக்கா—சேனநாயக்கா கயிறிழுப்பு ஒழிய, இன்று ஜே. ஆர்.—சிறிமா 'குஸ்திப்போட்டி' யாக மாறியது. இந்த ஆட்டத்துக்குப் பணயமானவர்கள் இலங்கைத்தமிழர்கள். ஆட்டத்தைப் பலமுறை பார்த்துக் களைத்தவர்கள் போராட்டத்தில் இறங்கத் துணிந்தனர். அத்துணிவால் வரலாறுகாணாத துன்பங்களுக்கு இன்றுவரை இரையாகி வருகின்றனர்.

ஆயுதம்தாங்கிப் போராடும் தமிழ்இளைஞர்களை முறியடிக்க முடியாத நிலையில் மக்களைச் சரிக்கட்டும் படலம் மும்மரமாகத் தொடர்கிறது. அதன் விளைவு உடனே வெளியாகாது.

இன்றைய ஆட்சிதொடக்கத்தில் போருடன் தொடங்கி ''போர்என்றாற்போர், சமாதானம் என்றாற் சமாதானம்'' என்று பிரகடனம் செய்த ஜனாதிபதி எட்டு வருடங்களின் பின்னரும் ''ராணுவமுடிவில்'' இறுக்கி நிற்பது நாட்டின் வரலாற்றில் ஒரு விபரீதநிலை.

150 சிங்கள மக்கள் அனுராதபுரத்தில் கொல்லப்பட்டதைப் பேரழிவாகக் கொண்ட ஆட்சியும் மக்களும், பல்லாயிரக்கணக்கான தமிழ் அப்பாவிமக்கள் இன்றுவரைக்கும் கொல்லப்படுவதை ஒரு பொருட்டாக்கொள்ளவில்லை. [illegible] ருல் பௌத்தசங்கமும் ஆட்சிப் போட்டிக்கு அத்தலைமையை நாடி நிற்கும் அரசியல் தலைவர்களும் நாட்டைப் பாதுகாக்க எடுக்கும் திட்டம் யாது?

தென் ஆபிரிக்காவில் போத்தாஇளகுவதும் இலங்கையில் ஜே. ஆர். இறுகுவதும் நெருக்கடிகளின் முடிவை குறிக்கும் எதிர்மறைச் [illegible] நிலை நிச்சயம் ஏற்படும்.

★ உலக அரசியல் அரங்கு — அரசியல் அவதானி

# அகிலஉலகையும் சஞ்சலத்தில் ஆழ்த்திவிட்ட அமெரிக்க 'சலஞ்சர்'!

**விண் உலக சஞ்சாரத்தில் விஞ்ஞானம் காட்டிவரும் வேகம், வாழ்க்கையின் இரகசியம் என்ற விடைகாணா வினாவால், தணிக்கை பெற்றிருக்கிறது.**

### வாஷிங்டன்

அமெரிக்க மக்களின் ஆறாத்துயருக்கு உலக நாடுகளும் தலைவர்களும், குறிப்பாக சோவியத் தலைவர் கொர்பச்சேவ்வும் அனுதாபம் தெரிவித்திருக்கின்றனர்.

1963ம் ஆண்டு ஜனாதிபதியின் அகால மரணத்தில் பட்ட துன்பம்போல், இன்று விண்வெளிக்கப்பல் விபத்தால் மனம்குமுறி நிற்கின்றது அமெரிக்கா. அண்மையில் இருபெரும் விமான விபத்துக்களில் பல அமெரிக்க மக்கள் கொல்லப்பட்டனர். அதனால் ஏற்பட்ட துன்பம் நாடளாவியதாக இருக்கவில்லை.

கடந்த செவ்வாய் நடந்த விபத்து ஒரு தேசிய இழப்பென்று கொள்ளப்படுகின்றது. இறந்தவர் ஐந்து வீரரும் இரண்டு வீராங்கனையுமான ஏழுபேராலும் அமெரிக்காவின் விண்வெளிச்சாதனையில் முன்னேற எடுத்த எத்தனம் முறியடிக்கப்பட்டது, தாங்கொணாத்துயரம் என்பதே மக்களின் உணர்வு தரும் விளக்கம்.

### பாடசாலை ஆசிரியை

இவ்விபத்தின் மிகச் சோகமான அம்சம்; தேசத்தின் ஆசிரியர்கள் பிரதிநிதியாக முதன் முதல் விண்வெளிப் பிரயாணத்தை மேற்கொண்டு, தான் பெற்ற இன்பத்தை மாணவ உலகத்துக்கு உதவ முயன்ற உயர் பாடசாலை ஆசிரியை கிறிஸ்டா மக்கோலிஸின் மரணம். அவருடைய சொந்த ஊர் ஒரு மயானம் போல் காட்சியளிக்கிறது. பூமியில் இருந்து கிளம்பிய பின் ஒரு சில செக்கனில் வெடித்த சலஞ்சரை அவதானித்துக் கொண்டிருந்த அவரது சகோதரியும், தாயாரும் நெஞ்சில் கைவைத்துப் பதறிய காட்சி கல்நெஞ்சையும் உருக்கவல்ல காட்சி.

அமெரிக்கப் பொதுமக்கள் எங்கும் தேவாலயங்களில் தஞ்சம் புகுவதும், தினசரி எட்டு 'மாஸ்' பிரார்த்தனை நடைபெறும் தேவாலயங்களில் மக்கள் நிரம்பி வழிவதும், நாடளாவிய துக்கத்தை பிரதிபலிக்கும் பரிதாபக் காட்சிகளாகும்.

### ஜனாதிபதி றீகன்

விண்வெளி ஆராய்ச்சியைத் துரிதப்படுத்திவரும் அமெரிக்க ஜனாதிபதி றீகன் ஒரு வாரத் துக்க அநுட்டிப்பை உத்தரவிட்டிருக்கிறார். மக்களின் ஒன்றுபட்ட உணர்வின் சின்னமாக விளங்கும் றீகன் ''எத்தகைய விபத்தோ, தடையோ விண்வெளி ஆராய்ச்சியையும் நட்சத்திர போர்த்திட்டத்தையும் முறியடிக்க மாட்டா என்றும், உலகின் வருங்காலம் வீரத்திலேயே தங்கியிருக்கிறதென்றும், ஜனநாயகஆட்சியில் இத்தகைய துன்பம் மக்களுக்கே உரித்தானது அரசுக்கல்ல என்றும், 1967ல் நடைபெற்ற விபத்துக்குப்பின் விண்வெளி ஆராய்ச்சிக்கு ஆதரவு அதிகரித்திருக்கிறதென்றும், சந்திரனில் நடந்த முதல் அமெரிக்கனின் சாதனையை நாம் மறக்க முடியாதென்றும் துன்பத்தின் மத்தியில் உற்சாகமாக உரை நிகழ்த்தியிருக்கிறார்.

### சுதந்திரதேசம்

அமெரிக்கா ஒரு பூரண சுதந்திரதேசமென்ற கருத்து இன்று சுமார் 210 வருடங்களுக்குப் பின்னரும் நிலவுகின்றது.

அமெரிக்காவைக் கண்டுபிடித்த கொலம்பஸ் அவர்களே பலவிபத்துக்களை, பல உயிர்ச்சேதங்களைத் தாண்டி வெற்றி கண்ட வீரன். இன்று உலகில் எல்லாத்துறைகளிலும் முதலிடம் வகிக்கும் அமெரிக்கதேசம், அல்லற்பட்ட மக்களுக்கும், தேசத்தலைவர்களுக்கும் புகலிடம் அளிக்கும் நாடாகவிருக்கிறது.

இரண்டாவது உலக யுத்தத்தில் ஹிட்லரின் கொடுமைகளுக்குத் தப்பி அமெரிக்க வந்த பெரியோரில்; உலகம் கண்ட மிகப்பெரிய பௌதிக விஞ்ஞானி ஐன்ஸ்டைனும் ஒருவராவார்.

### விஞ்ஞானத்தின் எல்லை

இன்று நடைபெற்ற விபத்து சாதாரணமானதல்ல. அமெரிக்க விஞ்ஞானமே இன்று உலகில் உச்சநிலையடைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. எனவே முதற்தரமான விஞ்ஞானக் குழுவினரின் பரீட்சையே - பலகாலம் பரீட்சித்து வெற்றி கண்ட முயற்சியே; 'சலஞ்சர்' ஆரம்பித்த விண்வெளிப்பிரயாணம். விண்ணுக்கு ஏவப்பட்ட 72 செக்கனில்நிலத்திலிருந்துபத்துமைல் உயரத்தில் சலஞ்சர் வெடித்ததின் மர்மம் விஞ்ஞானிகளுக்கு ஒருபெரும் 'சலஞ்'(Challenge) ஆகவே இருக்கிறது.

விஞ்ஞானியும் மனிதனே, சிந்தனையின் சிறுமையோ அல்லது யந்திரக்கோளாறோ, என்ன காரணமென்பது வெளியாவதற்குக் காலம்செல்லும்.

### இயற்கையும் மனிதனும்

இயற்கையைத் தம்வசப்படுத்தி மனிதன் அற்புத வாழ்வுக்கு வழி வகுத்திருக்கிறான், அந்த முயற்சியில் அடிக்கடி தடக்கி வீழ்ந்திருப்பதை வரலாறு கற்பிக்கிறது. விழுந்து விழுந்து, எழும்பி எழும்பி முன்னேற உதவும் விஞ்ஞானம் மனிதனின் சிறுமையால்பூரண அழிவுக்கு இடமளிக்காதா? இன்று நடைபெறும் விவாதம்; இலகுவில் முடிவடையாத விவாதம்.

இயற்கையின் பரமரகசியங்களையும் அணுவைத் துளைத்த விஞ்ஞான மேதை ஐன்ஸ்டையின், விஞ்ஞான உலகுக்கப்பால் ஏதோ இருப்பதாகச் சந்தேகம் தெரிவித்திருக்கிறார்.

[7ம் பக்கம் பார்க்க]

# திருமதி தட்சரின் 'சாயம்' கழன்றிருப்பதை அபிப்பிராய வாக்கெடுப்பு புலப்படுத்துகிறது

**இதுவுமொரு குட்டி 'வாட்டர்கேட்' ஆகலாமென்று கருதப்படுகிறது. நிக்ஸனைப் போல் தம்முடைய ஆட்சி, தளம்பாதென்கிறார் இரும்புப்பெண்.**

### லண்டன்

'வெஸ்ட்லண்ட்ஹெலிகப்டர் கம்பனி' விவகாரத்தின் விசாரணை இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. இரகசியமான தகவலொன்றைத் தமது வர்த்தக அமைச்சர் லியன் பிரிட்டான் வெளிப்படுத்திஇருக்கிறாரென்று பிரதமர் தட்சர் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த முறைகேட்டைக் கண்டித்து பாதுகாப்பு அமைச்சர் ஏற்கனவே இராஜினாமாச் செய்திருக்கிறார்.

வர்த்தக அமைச்சரைப்பாதுகாக்க பிரதமர் முயன்றபோதும் அதுமுடியாத நிலையில்; அமைச்சர் ராஜினாமாச்செய்துவிட்டார்.

இந்த விடயத்தை இவ்வளவு தூரம் சீர்கெடுத்ததற்குப் பொறுப்பு பிரதமரே என்ற பொதுமக்கள் அபிப்பிராயம் அதிகரித்து வருகிறது. இன்றைய நிலையின் சாம்பிள் வாக்கெடுப்பு, பிரதமர் தம்முடைய ஆட்சி முடிவுபெறமுன் ஒய்வு பெறவேண்டுமென்பதைக் குறிக்கிறது.

உடனடியாக அவருடைய கட்சியில் யார் அந்த இடத்தை எடுக்கலாமென்பது தெளிவாகவில்லை. ஆனால் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை1988தொடக்கத்திலேயே நடத்தவேண்டுமென்பதே இன்றைய பொது சன அபிப்பிராயம்.

### பாப்பரசரின் இந்திய விஜயம்

பாரததேசம் இரண்டாவது தடவை பாப்பரசரைக் கண்டிருக்கிறது. பத்துநாள் விஜயத்தை மேற்கொண்டு இந்தியா வந்திருக்கும் பாப்பரசர், மகாத்மாகாந்தியின் சமாதியிலே பிரார்த்தனை நடத்தியது; கிறீஸ்தவ மக்களை மட்டுமல்ல பெரும்பான்மை இந்துக்களையும் கவர்ந்திருக்கிறது. பூசல்கள் நிறைந்த உலகில் மத வேறுபாடுகள் ஏற்படுத்தும் பிணக்குகள் முற்றாய் அழியவில்லை. பாப்பரசரின் விஜயத்துக்கு எதிர்ப்புத்தெரிவித்த கூட்டத்தினர் இந்து சமயத்தின் பரந்த ஆன்மிக ஞானத்தை உணராதவர்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவில் கடத்தப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மேற்படி ஈரோஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தங்களது கேள்விகளுக்கு பிரிட்டிஷ் பெண் திருமதி வில்லிஸ் பின்வருமாறு பதிலளித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விபரம் வருமாறு:

''நான் அமைச்சர் லலித் அத்துலத்முதலியுடன் சுமார் இருபது நிமிடங்கள்வரை பேசினேன். தமது இராணுவம் தற்போது வலிமைபெற்றுள்ளதாகவும் விரைவில் பயங்கரவாதிகளை அடக்கிவிடலாம் என்றும் அமைச்சர் சொன்னார்.

''வடபகுதிக்கு நான் செல்ல வேண்டும் என்று அமைச்சரிடம் கேட்டேன் அதற்குஅவர் அது அபாயகரமானது.உங்கள் திறமையைப் பயன்படுத்திச் சென்றுபாருங்கள்'' எனக்கூறினார்.

''நான் கொழும்பில் அமைச்சர் லலித்துடன், டாக்டர் வீரசூரியாவையும், ஜெனரல் சிறில் ரணதுங்காவையும்,திரு. பெலி ஜெயவர்த்தனவையும் [இவர் ஜனாதிபதியின் மருமகன்] செல்வி டி. மெல்லையும், ஜெனரல் ஆட்டிக்கலையையும் சந்தித்தேன். பெலி ஜெயவர்த்தன எனது நண்பர்.

ஒரு இரவு விருந்தில் அவர் எனக்கு 'வைற், போப்ஸ்' என்ற இருவரை அறிமுகம் செய்து வைத்தார். இவர்கள் இருவரும் [எஸ். ஏ. எஸ்]பிரித்தானிய கூலிப்படையினர் என்று எனக்குச் கூறப்பட்டது. எனக்கு பிரித்தானிய கூலிப்படையின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான கொமாண்டர் ஸ்ரேலிங்கை நன்கு தெரியும். அவர்கள் குடும்பமும் எனது குடும்பமும் மிக நெருங்கிய தொடர்புடையது. எனக்கு ''ரேயல் யூனைட்டட் சேர்விஸ் போ டிவைன்ஸ் ஸ்ரடிஸ்'' என்ற பாதுகாப்பு நிறுவனத்துடன் தொடர்புண்டு. ஆனால் பாதுகாப்புத் துறைபற்றியோ, உளவுத்துறைபற்றியோ அறிவதில் ஆர்வமில்லை.

''இலங்கைக்கு மூன்று தடவைகள் வந்துள்ளேன். 1985 வைகாசியில் முதன் முறையாக வந்தேன். அப்போது நான் பிரித்தானிய விமானப் படையிலிருந்து ஒய்வுபெற்ற வில்லிஸ்கரோல் அன்ரனி என்ற எனது கணவருடன் உல்லாசப் பயணியாக வந்தேன். அப்போது கொழும்பு, கண்டி, நிலாவெளிப் பகுதிகளுக்குச் சென்றேன்.

''இரண்டாம் தடவை உல்லாசப் பிரயாணியாக 1985 புரட்டாதியில் வந்தேன். செல்வி டிமெல், ஈவன்ஸ் என்ற அறிமுகமில்லாத இளைஞருடனும் வந்து கொழும்பு, அநுராதபுரம், மட்டக்களப்பு, கல்குடா, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய இடங்களுக்குச் சென்றேன்.இப்பகுதி மக்களுடன் தொடர்புவைக்கவில்லை.

''மூன்றுவது விஜயத்தின் போது கொழும்பிலிருந்து அநுராதபுரம் வந்து முல்லைத்தீவு ஊடாகப் புல்மோட்டைக்கும், திருமலைக்கும் செல்ல முயன்றபோதே உங்களிடம் அகப்பட்டுக்கொண்டேன்.

நான் கொழும்பிலிருந்துஅநுராதபுரம் வரை வாடகைக்கு அமர்த்திய காரில் சிங்களச் சாரதியுடன்வந்தேன். பின்னர் முல்லைத்தீவுவரை நானேகாரை ஓட்டிவந்தேன்.

''இடையில் உள்ள சோதனைத் தடுப்புக்களைக் கடப்பதில் எவ்வித சிக்கலும் இருக்கவில்லை. இம்முகாம்களைக் கடக்கும்போது எவரும் என்னைச் சோதனையிடவில்லை. விசாரணை செய்யவில்லை. இம்முகாம்களைக் கடக்கும்போது நான் காரைக் கூட நிறுத்தவில்லை. (இவர் அநுராதபுரத்திலிருந்து முல்லைத்தீவு வரை இராணுவத் தொடர் வண்டிகளோடு பயணம் செய்தார்.)

''விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் சிலரை முல்லைத்தீவில் சந்தித்தேன். அவர்கள் பல விஷயங்களை எனக்குத் தெரிவித்தார்கள்.

''வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு வெளிநாட்டவர் எவரும் போகமுடியாத நிலையில் எனக்கு மட்டும் இந்த விசேட சலுகையை அமைச்சர் லலித் அத்துலத் முதலி வழங்கினார்.

'தேசிய புலனாய்வுத்துறையில் எனக்கு எவரையும் தெரியாது. இப்படி ஒரு நிறுவனம் இருப்பதும் தெரியாது.

'இவரிடம் கழிவுக் கடதாசிகளிடையே மறைத்து வைக்கப்பட்டிருந்த தேசிய புலனாய்வுத்துறை உதவிப் பணிப்பாளரின்'விசிற்றிங் கார்ட்' இருந்தது.

'விடுதலை இயக்கங்கள்,போர் முறைகள் பற்றி அறிவதில் எனக்கு ஆர்வம் இல்லை.

'நான் பத்திரிகையாளன் இல்லை. ஆனால் சைப்பிரஸ் மக்களைப் பற்றியும், அங்குள்ள போர் உத்திகளைப் பற்றியும் கட்டுரைகள் எழுதியுள்ளேன். 'சண்டே ரைம்ஸ்' என்ற பத்திரிகைக்கும் நான் எழுதியுள்ளேன்.

'வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும், வெளிநாட்டுப்பத்திரிகையாளர்களும் வருவதற்காக அமைச்சர் அத்துலத் முதலியைச் சந்தித்து ஆவன செய்ய உத்தேசித்துள்ளேன்.'

'இவரின் பேச்சுக்களிலிருந்து இவர் ஒரு சாதாரண பத்திரியாளரோ அல்லது உல்லாசப் பயணியோ அல்ல என்பது தெளிவு. இவர் 'எஸ்.ஏ.எஸ்.' எனப்படும் பிரித்தானிய கூலிப் படையினருடன் மிகநெருங்கிய தொடர்புடையவர் என்பது ஊர்ஜிதமாகிறது. அரசுக்குச் சார்பான தகவல்களைத் திரட்டிப் போராட்டத்தை நசுக்கவும், விடுதலை இயக்கங்களின்பலம், பலவீனம் என்பவற்றை அறிவதோடு போராட்டத்தைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை தீட்டுவதற்கு ஏதுவான தகவல்களைத் திரட்டுவதே இவரது விஜயத்தின் நோக்கமாகும். இத்தகைய செயல்களில் ஈடுபடும் வெளி நாட்டவர் எவரையும் மன்னிக்க முடியாதவர்களாகவே கருதுகிறோம்'' என்று மேற்படி பிரிட்டிஷ் பெண்மணியை விசாரணை செய்த 'ஈரோஸ்' அமைப்பு தனது அறிக்கையின் அடிக்குறிப்பில் தெரிவித்துள்ளது.

அறிக்கையுடன் இப்பெண்ணிடம் பெற்ற 'ரேயல் யூனைட்டட் சேர்விஸ் போ டிவன்ஸ் ஸ்ரடிஸ்' நிறுவன அடையாள அட்டையின் போட்டோ பிரதியும், 'உதவிப் பணிப்பாளர் தேசிய புலனாய்வுத்துறை அதிகாரியின் விசிற்றிங் கார்ட்டின் போட்டோ பிரதியும் இணைக்கப்பட்டிருந்தன. [ஐ]

---

## கடைசிநேர வரிவிளம்பரம்


## தேவை

10 போத்தலுக்கு மேல் பால் கறக்கும் இளம் பால் மாடு தேவை. அத்துடன் வற்று பால்மாடு மாறிக்கொள்ளலாம். 96, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [C534]

**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30,
மோகன் — கவுண்டமணி
**டிசெம்பர் பூக்கள்**

**லிடோ சினிமா**
10-30, 2-30, 6-30
கார்த்திக்—ராதா
நடித்த
**அலைகள் ஓய்வதில்லை**

**வெலிங்டன்**
10-30, 2-30, 6-30
சிவாஜி— கே. ஆர். விஜயா
நடித்த
**நெஞ்சிருக்கும் வரை**


## அறிவித்தல்

சுன்னாகம் வாணி இன்ஸ்ரிரியூட் மாணவர்கள் நடாத்திய கண்காட்சியும் மலிவு விற்பனையும் பற்றிய வரவு செலவுத்திட்டமும், மற்றும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்பது சம்பந்தமான கூட்டமும் 5- 02- 1986 பிற்பகல் 2 மணிக்கு வாணியில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

(C 33) வாணி மாணவர்கள்.

---

# 50 பேர் கைது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதாகியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கல்வடி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு 'முகமூடி' மனிதர் முன்னிலையில் நிறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டதன்பின் பலர் விடுதலையாகினர். சிலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

---

# ரொமேஷ்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டனர்.

''இலங்கையின் இனப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி சமர்ப்பித்த புதிய யோசனைகளுக்கும் இலங்கை அரசு அளித்திருக்கும் பதிலுக்குமிடையே பெரும் இடைவெளிகாணப்படுகிறது'' என்று திரு. ரொமேஷ் பண்டாரி கூறியுள்ளார்.

வடக்கு. கிழக்கு மாகாணங்களை இணைக்கவேண்டுமென்ற கூட்டணியின் கோரிக்கையை இலங்கை அரசு ஒரேயடியாகப் புறக்கணித்துவிட்டதாக திரு. ரொமேஷ் பண்டாரி தெரிவித்தார்.

''அரசியல் தீர்வொன்று காண்பதற்கு உதவுவதுதான் நமது அக்கறை ,என்று இந்தியா தெளிவுபடுத்தியுள்ளது. பயனுள்ள முறையில் பேச்சு நடைபெறச் செய்வதற்காகச் சண்டை நிறுத்தம் கண்டிப்புடன் செயலாக்கப்பட்டு வன்முறையை முடிவுக்குக்கொண்டு வரவேண்டும்'' என்றும் அவர் கூறினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திரு. அ. அமிர்தலிங்கம்: திரு. மு சிவசிதம்பரம், திரு. இரா. சம்பந்தன் ஆகியோரும் திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்தார்கள். [து]

---

# ஜனாதிபதி---

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டவர்களாவர்.

ஒரு கடிதத்தின் மூலமே பொலிஸாருக்கு மேற்படி நபர்கள்பற்றிய தகவல் கிடைத்ததாகவும், இருவரும் இரகசிய பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 'ஈழநாடு' பத்திரிகை இந்தியத் தூதுவர் திரு. டிக்ஸிற்றுடன் தொடர்பு கொண்டபோது, இச்சம்பவம் குறித்து இந்திய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், இது பற்றி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தார். [க]

---

# நூல் வெளியீட்டு விழா

[யாழ்ப்பாணம்]

தென்னிந்திய திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் சபாபதி குலேந்திரனின் நூல் தொகுப்புகளும், அவரின் சேவைக்கு நன்றியாக வெளியிடப்படும் கட்டுரைத் தொகுப்புகளும் மத சமூகவியல் ஆய்வுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தினரால் இம்மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் வெளியிடப்படவுள்ளன

பேராயர் டி. ஜெ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராயர் தியோகுப்பிள்ளை ஆகியோர் கலந்துகொள்வார்கள். திரு. எஸ். ஜெபநேசன் நூல்களை அறிமுகம் செய்துவைப்பார். [பி]

---

# பஸ் பயணிகள் ரயிலில் வந்தனர்

[யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பிலிருந்து இ. போ. ச. பஸ்ஸில்வந்த சுமார் 40 பிரயாணிகள் நேற்றுக்காலை மாங்குளம் ரயில் நிலையத்திலிருந்து'யாழ்தேவி'மூலம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

இவர்கள் நேற்று முன்தினம் இரவு வவனியாவிற்கு வந்து சேர்ந்தபோது அப்பால்செல்ல முடியாதிருந்ததினால் வவனியாவில் தங்கினார்கள். நேற்றுக்காலை இவர்கள் பஸ்ஸில் புறப்பட்டுமாங்குளம்வந்து, 'யாழ்தேவி'மூலம் நேற்று யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர்.

---

# அதிரடிப்படை---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

''தருமபுரம், வட்டக்கச்சிப் பகுதிகளில் தீவிரவாதிகள் வெடிகள் மூலம் பல பாலங்களைத் தகர்த்துள்ளனர். முல்லைத்தீவில் பாதுகாப்புப் படையினரால் மூன்று தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.''

---

# வட்டக்கச்சி----

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இரு சலவைத் தொழிலாளர்கள் பலியானார்கள். இவர்கள் தமது வீட்டில் இருக்கும்போது இச்சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி வட்டச்கச்சிப் பகுதியில் பரவலான தாக்குதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. எதிர்த்தாக்குதலும் பரவலாகநடைபெற்றது.

விமானத் தாக்குதலில் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இராமநாதபுரம் பகுதியில் தொடர்ந்து 4-வது நாளாக இராணுவம் ஒரே இடத்தில் நிலைகொண்டுள்ளது. இவர்களை நோக்கி எதிர் தாக்குதல் தொடர்ந்து நடக்கிறது,

நேற்றுக்காலை 7 மணிக்கு கிளிநொச்சியில் இருந்து யாழ், சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ்கள், ஆனையிறவில் வைத்து இராணுவம் ஏற்றப்பட்டு பிரயாணிகளுடன் கிளிநொச்சி இராணுவ முகாம் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்டதாகவும், அப்போது பெண்பிரயாணிகள் அச்சத்தால் கூச்சலிட்டபோது பிரஸ்தாப பஸ்கள் பிரயாணிகளுடன் மீண்டும் யாழ்ப்பாணம் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டது.

இதேவேளை கல்மடுக் குளத்தின் ஒருபகுதி உடைக்கப்பட்டு நீர் வெளியேற்றப் பட்டுள்ளது, இதன் காரணமாக இராணுவத்திற்கு பெரும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சி நகரப்பகுதியில் இச்சம்பவங்களை அடுத்து பதற்றம் ஏற்பட்டுள்ளது. வட்டக்கச்சி மாயவனூரில் ஆகாயத் தாக்குதலில் இ. சொக்கலிங்கம், இ. சைலஜா, இ. இராமசாமி, திருமதி வெள்ளையம்மா முதலானோர் . காயமடைந்துள்ளனர். இவர்களது வீடும் தீக்கிரையானது.

---

# மன்னார் சம்பவம்-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இச்செய்தியை இந்தியாவின் பி.ரி. ஐ, செய்தியை ஆதாரமாகக் காட்டி இந்தியாவின் பிரபல பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இச்செய்தியை இலங்கை அரசு மறுத்ததோடு, பாதுகாப்புப் படையினர் தரப்பில் எவரும் இறக்கவில்லையென்றும் கூறியுள்ளது.

---

# இந்த ஆசிரியர்களுக்கு மேமாதம் மாற்றம்

[கொழும்பு]

சொந்த மாவட்டங்களுக்கு வெளியே பத்து ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு மே மாதம் முதலாம்திகதி தொடக்கம் இடமாற்றம் வழங்க கல்விச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்திருப்பதாக கலாநிதி ஆ. கந்தையா 'ஈழநாடு'வுக்கு நேற்று தெரிவித்தார்.

இந்த இடமாற்றங்கள் சேவை மூப்பு அடிப்படையிலேயே வழங்குவதாகக் கூறிய அவர், ஆறு ஆண்டுகளுக்கு மேல் சேவையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் குறித்தும் பரிசீலனை செய்யப்படும் என்றார். (இ-பி)

---

# இரு வர்த்தகர்கள் விசாரணையில்

[வவனியா]

வவனியா நகரிலுள்ள பிரபல வர்த்தகர்கள் இருவரை பொலிசார் விசாரணைக்காக நேற்றுமுன்தினம் கூட்டிச் சென்றுள்ளனர்.

இவர்கள் இருவரும் நேற்று மாலைவரை விடுதலைசெய்யப்படவில்லை. ஒருவர் கிருமிநாசினி வியாபாரி. மற்றவர் உர வியாபாரி.

இவர்கள் இருவரது கடைகளும் கடந்த வியாழக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட 'செவன லொத்தர்' வியாபாரியின் கடைச்கு அருகிலும்,எதிரிலும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

---

# இந்தியா வெற்றி

[தஸ்மானியா]

இந்திய-நியூஸிலாந்து கிரிக்கெட் அணிகளிடையே அவுஸ்திரேலியாவின் தஸ்மானியாவில் நடைபெற்ற மூன்று நாடுகள் பங்குபற்றும் 'உலகக் கிண்ண' கிரிக்கெட் போட்டியில், நேற்றைய ஆட்டத்தில் இந்தியா 21 ஓட்டங்களினால் வெற்றிபெற்று இறுதியாட்டத்தில் விளையாடத் தகுதிபெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 48 ஓவர்களில் 202 ஓட்டங்களைப் பெற்றது. இதன் பின்னர் மழை பெய்ததினால் நியூஸிலாந்து அணி 45 ஓவர்களில் 189 ஓட்டங்களைப் பெற வேண்டியிருந்தது. ஆனால் நியூஸிலாந்து அணி 45 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 168 ஓட்டங்களை மாத்திரம் பெற்றதினால் இந்தியா 21 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது.

இறுதியாட்டத்தில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் வரும் புதன்கிழமை மோதுகின்றன.

# இலங்கை வெற்றி

இங்கிலாந்து 'பி' பிரிவு கிரிக்கெட் அணிக்கும், இலங்கை 'பி' பிரிவுக் கிரிக்கெட் அணிக்குமிடையில் நடைபெற்ற, ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

நேற்று முன்தினம் மொறட்டுவையில் நடைபெற்ற ஒரு நாள் கிரிக்கெட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆக்கபூர்வமான இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும்"

## பேராசிரியர் சிவத்தம்பி விளக்கம்

(யாழ்ப்பாணம்)

''ஆட்சிக்கும் மக்களுக்குமிடையில் தொடர்பு பேணுவது பிரஜைகள் குழுக்களின் முக்கிய கோட்பாடாகும். மக்கள் முகவர்களாகியதும், சகலரையும் உள்ளடக்கிய, சட்டவரம்பிற் குட்பட்ட, வன்மையுள்ள இயக்கத்தை ஆரம்பிக்கவேண்டியது அத்தியாவசியமாகும்''

நல்லூர் இந்துவிடுதியில் 10 லட்சம் கையெழுத்துப் பட்டியல் இயக்கத்தை நேற்று முன்தினம் ஆரம்பித்துவைத்த யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் கா. சிவத்தம்பி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: வெகுஜன இயக்கங்கள், சமூக ஸ்தாபனங்கள், மதநிறுவனங்கள்யாவும்,தாங்களே பொறுப்பென நினைத்து இதனை ஏற்று செயல்படவேண்டும்இதுயாழ், நகரை மட்டும் எதிர் நோக்கும் பிரச்னையாகக் கருதாமல், அரசபடைகள் எங்கெல்லாம் இருக்கின்றதோ, அங்கெல்லாம் உள்ள பிரச்னை எனக் கருதவேண்டும்.

''யாழ்ப்பாண பிராந்தியத்தில் பாதுகாப்பு வலயத்திஞல் 50 வீதமான மக்கள் பாதிப்படைந்துள்ளனர். வல்வெட்டித்துறையில் 82 வீதமான மக்களும், பலாலியில் 61 வீதமான மக்களும்,இதஞல்பாதிப்படைந்துள்ளார்கள்.

''இந்த இயக்கம, புதிதாக தோன்றியுள்ள பேராபத்தை எடுத்துக்காட்டுவதுடன் எங்கள் ஒருமைப்பாட்டையும் வெளிக்காட்டவேண்டும்.

''வடக்கு கிழக்கிற்கு பொதுவான ஒரு விடயமாக இந்த இயக்கம் அமையவேண்டும்'' என்ருர். [க]


## கண்டனக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஜெரூசலேம் அக் - அக்ஸா பள்ளி வாசலில் இஸ்ரேல் அண்மையில் புரிந்த அட்டூழியங்களை கண்டிக்கும் முகமாகம் யாழ் முஸ்லிம்கள் தங்கள் மன எழுச்சியை தெரிவிக்கும் முகமாகவும் இன்று திங்கட்கிழமை மாலை யாழ்மானிப்பாய் வீதி மொகிதீன் ஜும்மா பள்ளி வாசலில் அமைந்திருக்கும் தீனியா மத்ரஸா கட்டிடத்தில் ஒரு பகிரங்க கண்டனக் கூட்டம் நடைபெறவுள்ளது.

பள்ளிவாசல் நிர்வாகிகளிஞல் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் யாழ். பல்கலைக்கழக முஸ்லிம் விரிவுரையாளர்களும் மார்க்க அறிஞர்களும் உரையாற்றுவார்கள்.

## நியமனம்



(யாழ்ப்பாணம்)

சர்வதேச போர்எதிர்ப்பாளர் இயக்கத்தின் நிர்வாக செயற்குழு உறுப்பினராக அறவழிப்போராட்டக்குழுவின் செயலாளரான திரு. க. ஜீவகதாஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச போர் எதிர்பாளர் இயக்கத்தின் 18-வது மாநாடு கடந்த மாதம் இந்தியாவில் நடைபெற்றது.சுமார் 60 நாடுகள் பங்குகொண்ட இம்மாநாட்டில் இடம்பெற்ற செயற்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலில் 19 பேர் போட்டியிட்டனர். இவர்களில் 12 பேர் தெரிவுசெய்யப்பட்டனர். திரு. ஜீவகதாஸ் இத்தேர்தலில் கூடுதலான வாக்குகள் பெற்று 4-வதுஉறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினராக இருக்கும் அவர் சர்வதேச சமாதானசேவை இயக்கத்தின் (இலங்கைக்கிளை) உபதலைவராகவும் கடமையாற்றுகிருர்.

1983-ம் ஆண்டில் நடைபெற்ற இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கைதடியில் அறவழிப்போராட்டக்குழுவின் ஊடாக முகாம் அமைத்து முழுநேர ஊழியஞகப் பணிபுரிந்த இவர் மறவன்புலோ, கெற்பலி போன்ற இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இருப்பிடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதிலும் முன்னின்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாவகச்சேரி மட்டுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட திரு. ஜீவகதாஸ் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவராவார். 'ஈழநாடு' பத்திரிகையின் சாவகச்சேரி நிருபராகவும் இவர் கடமையாற்றுகிருர்.

## இன்றைய பலன்

மாதம்- தை
திகதி- (1986-2-3)
கிழமை- திங்கள்
திதி- நவமி முன்இரவுவரை
நட்சத்திரம்- விசாகம்
காலை 9-06ன்மேல் அனுசம்.

மேடம்- வாகனம் செலுத்துவோர் இன்று அவதானம் வேண்டும். கருத்து மோதல்களுக்கு இடமுண்டு. நாவடக்கம் நன்று.

இடபம்- ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள் இன்று ஆதரவு கொடுப்பதற்கு முன்வருவர். காதல் ஜோடிகளுக்குப் பொன்ஞன தினம்.

மிதுனம்- அதிக நம்பிக்கை ஆபத்தைத் தேடித்தரலாம். தன்கையே தனக்குதவி என்று செயலாற்றவும்.

கடகம்- சில விடயங்களில் நீங்கள் அதிகம் உணர்ச்சிவசப் படுவீர்கள். கவர்ச்சிகரமான தினம்.

சிங்கம்- தொழில் மாற்றம் அல்லது இருப்பிடமாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவி உயர்வும் உண்டு.

கன்னி- தனத்துடன் வாழ்வு இன்று தவருது கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்டங்களுக்கு இடமுண்டு. வியப்பூட்டும் செய்தியும் கிடைக்கும்.

துலாம்- தனதானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். வேண்டியவர் ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். கடமையாற்றுமிடத்தில் நிதானம் வேண்டும்.

விருச்சிகம்- குமுறும் நெஞ்சத்துடன் நாளைக் கடத்துவீர்கள். சிறுவிடயத்திற்குக்கூட மற்றவர்கள் குறை கூறுவார்கள். சுகாதாரமாக நடந்து கொள்வது நன்று.

தனுசு- புரட்சிகரமான நிலையை விரும்புவீர்கள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போட நேரும். உணர்ச்சிமயமான தினம்.

மகரம்- நம்பிக்கை மோசடி நடக்கும். நண்பர் ஒருவர் உமது காலை வாரிவிடுவார். செலவினங்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளவும்.

கும்பம்- வெற்றி உமதருகில் விரைந்துவரும். எதிர்பார்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவர். களஸ்திர வழியாலும் நன்மை உண்டு.

மீனம்- அதிகாரப்பேறுக்கும் அதிக பொருள் வரவிற்கும் இடமுண்டு. ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

(யாழ்ப்பாணம்)

வசாவிளான்-கட்டுவன் வீதியில் சைக்கிளில் சென்ற ஒருவர் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாஞர். இவரது சடலம் இன்னமும் அ[illegible]இடத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சைக்கிளில் சென்ற நபர், காங்கேசன்துறைப் பகுதியில் கடமையாற்றுபவராயிருக்கலாம் என்றும், நேற்றுமுன்தினம் அவர் அவ்வீதியால் செல்லும்பொழுது துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காஞர் என்றும் கூறப்படுகிறது.

அதேசமயம் காங்கேசன்துறையிலுள்ள அரச களஞ்சியத்தில் வேலைசெய்யும் நடராசா என்பவர் கடந்தமாதம் 25ம் திகதியிலிருந்து காணுமல்போய்விட்டதாகவும் இவர் கம்பர்மலையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (மா)

## அமரர் அமிர்தவல்லி இராசையா



மாணவர்களின் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழ்மொழியின் மேன்மைக்கும் கடந்த 38 வருடங்களாகத் தொண்டாற்றியவர் பண்டிதை அமிர்தவல்லி இராசையா ஆவார்.

மதுரைத் தமிழ்ப்பண்டிதர் சான்றிதழை வைத்திருந்தும் அரச சேவையில் அன்னர் நாட்டங்கொள்ளவில்லை. பிள்ளைகளுக்குத்தமது மேற்பார்வையிலேயே தமிழ் கல்வி நடைபெற வேண்டும் என்ற பெரு நோக்குடன் வீட்டிலே பாடசாலையை ஆரம்பித்தார். பல பிள்ளைகட்கு தமிழை முறையாகக் கற்பித்தார். அவரிடம் கற்ற பிள்ளைகளில் அநேகர் இன்று நீதிபதிகளாகவும் மருத்துவராகவும், பொறியியலாளர் ஆகவும் இருந்தாலும் ஆழ்ந்த தமிழ் அறிவுடன் இருப்பதைக் காணலாம். பல பண்டிதர் [illegible]

[7-ம் பக்கம் பார்க்க]

**பிரயாண ஒழுங்குகள்**

டோஹா, கட்டார்- பொது உதவியாளர், சாரதிகள் பதவிகளுக்கு குறுகியகாலவெல்லைக்குள் பிரயாண ஒழுங்குகள்.

தொடர்பு:- மல்ரி சேவிசஸ்,
37 (351), மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் தியேட்டர் சந்திக்கருகாமை)
C-497

**88 AUG.**
**A/L** கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள்
ஆரம்பம்: 05-02-1986
(புதன் 4·00)
**NIRU TUITION CENTRE**
STATION ROAD, KONDAVIL.
(கிளை நிறுவனம்: கொக்குவில்)
(A186)

**விற்பனைக்கு**

1. யாழ். மத்தியூஸ் வீதியில் ஒரு பரப்பிலமைந்த சகல வசதிகளுடனுமான 3 அறை வீடு.
2. யாழ். கோவில் வீதியில் (கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில்) 3 பரப்பு. 1½ பரப்புக் கொண்ட இரு காணிகள்.
3. கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அண்மையாக கண்டி வீதியில், குடியிருப்புக்குகந்த பிரயோசனங்களுடனை 3 பரப்புக் காணி.
4. வவனியா மன்ஞர் வீதியில், கிணறு, வதிவிடம், பிரயோசனங்கள் கொண்ட 5 ஏக்கர் காணி.

தொடர்பு:
"மல்ரி சேவிசஸ்"
37(351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் தியேட்டர் சந்தி)
யாழ்ப்பாணம் C 496

1964-ம் ஆண்டின் 28-ம் இலக்க காணி எடுத்தல் (திருத்தம்) சட்டத்தின்படி திருத்தப்பட்டவாருன காணி எடுத்தல் சட்டம்
(அத்தியாயம் 46)

## அ றி வி த் த ல்

ஈழமுரசு / ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் முறையே 85-11-25, 85-11-26-ம் திகதிகளில் வெளிவந்த காணி சுவீகரிப்பு அறிவித்தலைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையின் பின் முதற்கட்டம்-1 இன்கீழ் சுவீகரிக்கப்பட இருக்கும் முதல் எட்டுத் துண்டுகளுக்கும் பின் வருவோர் உரிமையாளர்களாகக் காணப்பட்டு, பிரதான விலைமதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்ட அவர்களது இடிக்கப்பட்ட வீடுகளின் மதிப்பீட்டுத் தொகையின் ஒரு பகுதியை முற்பணமாகக் கொடுப்பதற்கு நான் நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகிறேன்.

1. பட இல. 490/14-11-85 — திரு. அருணுசலம் திருநாவுக்கரசு, கவிலுப்பிட்டி, வடக்காடுஅம்மன் கோவிலடி, காரைநகர்.
2. பட இல. 491/18-11-85 — அருணுசலம் பொன்னம்பலம், தபாற்கந்தோரடி, கருங்காலி, காரைநகர்.
3. பட இல. 494/18-11-85 — ஆறுமுகம் கதிரவேலு கைம்பெண் பாறுபதிப்பிள்ளை, மே/பா என். மகேசன், சம்பந்தர் கண்டி, காரைநகர்.
4. பட இல. 496/18-11-85 — சின்னத்துரை இராசரத்தினம், 150, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம்.
5. பட இல. 493/18-11-85 — செல்வராசா பெண் யோகேஸ்வரி, தபாற்கந்தோரடி, கருங்காலி, காரைநகர்.
6. பட இல. 492/18-11-85 — அரியகுட்டி இராசையா, சத்ரந்தை, மணியம் ரோட், களபூமி, காரைநகர்.
7. பட இல. 495/18-11-85 — இராமலிங்கம் செல்லையா, விழானை, காரைநகர்.
8. பட இல. 497/18-11-85 — சே. சச்சிதானந்தன், 93, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

மு. பஞ்சலிங்கம்,
மாவட்ட செயலாளரும், அரசாங்க அதிபரும்,
யாழ்ப்பாண மாவட்டம்.

செயலகம், யாழ்ப்பாணம்,
31-12-85. (ஏ 170)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு வீடுகளில் பல லட்சம் ரூபா கொள்ளை!

## கட்டுவன்பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இரு சகோதரர்களின் அடுத்தடுத்துள்ள இரு வீடுகளில் லட்சக்கணக்கான ரூபா பெறுமதியான நகைகள், ரொக்கப் பணம் உட்பட விலை உயர்ந்த பொருட்கள் ஆயுதமுனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை - கட்டுவன் பகுதியிலுள்ள ஊரங்குணை என்னுமிடத்தில் வர்த்தகர் வயிரமுத்து கனகரத்தினம் என்பவரின் வீட்டிலும் அவரின் சகோதரியின் வீட்டிலும் இக்கொள்ளைச்சம்பவங்கள் இடம்பெற்றன,

கடந்த வியாழனன்று வீட்டின் உரிமையாளர்களான அவ்விருவரும் கொழும்பு சென்றிருந்தனர். இவர்களின் மற்றிரு பெண் சகோதரர்கள் அவ்வீடுகளில் பாதுகாப்புக்கிருந்தனர்.

சம்பவதினமிரவு 7 மணியளவில் வானொன்றில் துப்பாக்கி தாங்கிய இனந்தெரியாத ஒன்பது நபர்கள் அவ்வீட்டுக்கு வந்திருந்தனர். வீட்டிலிருந்தவர்களைத் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 'தாம் ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்' என்று சொல்லிக்கொண்டு இருவரையும் அறை ஒன்றுக்குள் தடுத்து வைத்தனராம்,

வீட்டின் ஒவ்வொரு அறைக்குள்ளும் புகுந்து ரி. வி., டெக், கமரா, நகைகள், மற்றும் 4 ஆயிரம் ரொக்கப் பணம், புதிய கோட்டுகள், கால்சட்டைகள் ஆகியவற்றை எடுத்துக் கொண்டனராம். இவற்றின் பெறுமதி ஒன்றரை லட்சம் ரூபாவுக்கு மேலிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் அடுத்த வீட்டிலிருந்தும் நகைகள், ரொக்கப் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொள்ளையடித்தவர்கள் வீட்டை வீட்டு வெளியேறும் பொழுது ஒரு கதிரையில் சேலைஒன்றைச்சுருட்டிவைத்து, விட்டு வீட்டிலிருந்தவர்களைப் பார்த்து, சத்தம்போட்டால் கதிரையில் வைக்கப்பட்டிருக்கும் குண்டு வெடிக்கும்'' என்று எச்சரிக்கை செய்தார்களாம்.

ஏற்கனவே பதற்றமடைந்திருந்த இப்பகுதி மக்கள் மத்தியில் இக்கொள்ளைச்சம்பவங்கள் மேலும் பீதியடையச்செய்துள்ளது.

பலாலி இராணுவமுகாமுக்கு அண்மையில் உள்ள இக்கிராமங்களிலுள்ள மக்களில் பலர் வெளியேறி அயல் கிராமங்களில் தஞ்சமடைந்துள்ளது தெரிந்ததே. (மா)

---

## உணவு விநியோகம் இடை நிறுத்தம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையில் உணவு விநியோகம் இடை நிறுத்தப்பட்டுள்ளதால் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள் மிகுந்த சிரமமடைந்துள்ளனர்.

இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த வைத்திய சாலையில் உணவு விநியோகம் நடைபறவில்லை என்றும்உணவு ஒப்பந்தக்காரர் எவரும் நியமனம் செய்யப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உணவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளருக்கு வைத்திய சாலைப் பொறுப்பதிகாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

---

## அமரர்

(6-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் காரணமாக அகதிகளாக வந்தவர்களுக்கு இரவு பகல் பாராது தமது சுகதுக்கம் பாராது கற்பித்ததை அந்த உள்ளங்கள் இன்றும் என்றும் அறியும்.

அம்மையார் இல்லற வாழ்வில் ஈடுபட விரும்பவில்லை. ஆனாலும் தனது சகோதரர்களின் பிள்ளைகளின் நல்வாழ்வுக்குத் தன்னால் இயலக்கூடிய உதவிபுரிய எண்ணி 1977 இல் பகுதி நேர விரிவுரையாளராக யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் சம்பளத்திக்காகச் சில காலம் கடமையாற்றினார்.

தனது பிற்காலத்தில் கதிர்காமம், நல்லூர், நயினாதீவு திருவிழாக் காலங்களில் அத்திருத்தலங்களின் சிறப்புப் பற்றியும், திருவிழாக்கள் பற்றியும் கட்டுரைகளை எழுதி அச்சேற்றி பொதுமக்களையும் அறியும் படி உண்டாக்கி வைத்த பெருந்தகை. எங்கெங்கு தமிழ்ப் பேச்சுப்போட்டிகளோ அங்கெல்லாம் அம்மையார் நடுவராக இருப்பார். எங்கெல்லாம் சமயம் பற்றிய அறிவுப் போட்டிகளோ அங்கும் அம்மையார் இருப்பார். இத்தகைய பெருமை வாய்ந்த இவர் மறைந்து இன்றுடன் 31 தினங்கள் பூர்த்தியாகின்றன. அன்னாரின் ஆத்மா சாந்தி பெறப்பிரார்த்திப்போம்.

-க. துரைராசா

---

## மோட்டார்சைக்கிள் கடத்தப்பட்டது

(பண்டத்தரிப்பு)

வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத இருவரினால் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்பில் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

வை. எம். சி. ஏ. இயக்கத்தின் அகதிகள் வீடமைப்புத் திட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் திரு. பி ஜே. ராஜு என்பவருக்குச் சொந்தமான இந்த மோட்டார் சைக்கிள் பண்டத்தரிப்புச்சந்திக்கு சமீபமாகவுள்ள அவரது வீட்டில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோதே கடத்தப்பட்டது.

---

## வீதி திருத்தம்: மக்கள் கவலை

(புங்குடுதீவு)

புங்குடுதீவின் பல பகுதிகளிலுள்ள வீதிகள் ஆண்மையில் கிராமச்சங்கத்தினால் திருத்தப்பட்ட போதிலும் அவை சரியான முறையில் திருத்தப்படவில்லையென்று உயர் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்ததையடுத்து மீண்டும் திருத்த வேலைகள் ஆரம்பமாகுமென தெரிவிக்கப்பட்டது.

திருத்த வேலைக்கான கல், மணல் என்பன வந்து சேர்ந்து பல நாட்களான போதிலும் இன்னமும் அவை பற்றி எந்த வித கவனமும் எடுக்கப்படாமை குறித்து மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

---

## வேம்படி மகளிர் அபி. சங்க தீர்மானம்

(மானிப்பாய்)

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை உடனடியாக நீக்குமாறுகோரும் தீர்மானமொன்று வேம்படி மகளிர் கல்லூரி அபிவிருத்திச் சங்க நிர்வாகக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கல்லூரி அதிபர் அ. இராஜரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தினால் மாணவர்கள், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டது.

ஜனாதிபதி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ஆகியோருக்கு இது சம்பந்தமான மகஜர் உடன் அனுப்பி வைப்பதென கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையிலுள்ள சகலவெளிநாட்டு ஹைக் கமிஷனர்களுக்கும் இது சம்பந்தமான வேண்டுகோள் விடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கல்லூரி விடுதியில் பல மாணவர்கள் தங்கிப் படித்து வருவதாலும் பல ஆசிரியர்களதும் வீடுகள் குறிப்பிட்ட இந்த வலயத்தினுள் இருப்பதாலும் புதிதாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பாதுகாப்பு வலயத்தால் இவர்கள் எந்த நேரமும் ஆபத்தான ஒரு சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாலும் இதனை மனிதாபிமானத்துடன் நோக்கி உடனடியாக விலக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறுகேட்டுக் கொள்ளும்மகஜர் ஒன்றைஜதிபதிக்கு அனுப்பிவைப்பதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பாதுகாப்பு வலயம் பிறப்பிக்கப்பட்ட பின்னர் மாணவர்களது மனோநிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதால் இவர்கள் கல்வியும் பெரிதும் பாதிப்பு அடைந்து [illegible]

---

## 'செல்வா' பெயரில் அகதி முகாம்

[யாழ்ப்பாணம்]

தமிழ் மகளிர் அவையினால் ஆறு மாதங்களாக நடாத்தப்பட்டுவந்த கச்சேரி—நல்லூர் வீதியிலுள்ள அகதிமுகாமை யாழ்ப்பாணத்திலுள்ள எட்டுப் பொது ஸ்தாபனங்கள் இணைந்து கையேற்றுள்ளன.

இம்முகாமிற்கு 'செல்வா' அகதிமுகாம் எனப் புதிய பெயரும் சூட்டப்பட்டுள்ளது. முகாமை இனிமேல் அகதிகளாக உள்ள மக்களே நிர்வகிப்பார்கள் என்று அண்மையில் முகாமில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

அன்னையர் முன்னணி யாழ். வை. எம். சீ. ஏ., யாழ். வை. டபிள்யூ. சீ. ஏ., இணுவில் மாதர் மறுமலர்ச்சி முன்னணி செல்வா நகர் தமிழ்ச்சங்கம், தமிழ் ஈழக்கலைக்கழகம், சமூக சேவை அபிவிருத்தி முன்னணி தமிழ் மகளிர் அவை ஆகியனவே இந்த முகாமை நடாத்த கையேற்ற பொதுஸ்தாபனங்களாகும்.

---

## வேலணையில் அகதிகள் நிலை குறித்துக் கூட்டம்

(வேலணை)

வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சாமி மத்தியமகா வித்தியாலயத்தில் தங்கியிருக்கும்திருகோணமலைஅகதிகளின் இன்றைய நிலைகுறித்து இன்று காலை வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம் தலைமையில் கூட்டமொன்று நடைபெறவிருக்கின்றது.

இக்கூட்டத்தில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச்சேர்ந்த கிராமசேவையாளர்கள், விசேஷ சேவை உத்தியோகத்தர்கள், பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

---

# கண்காணிப்புக் குழுவை அங்கீகரிக்க மாட்டோம்

## ஈழம் தேசிய விடுதலை முன்னணி பண்டாரியிடம் வலியுறுத்தும்

(சென்னை)

''இலங்கையில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை நாம் அங்கீகரிக்கப் போவதில்லை'' என்றுதம்மைசந்திக்கவிருக்கும் இந்திய வெளியுறவு செயலர் திரு. ரொமேஷ் பண்டாரியிடம் தெரிவிக்கப்போவதாகஈழம்தேசியமுன்னணியின் தலைவர்கள் சென்னையில் கூறியுள்ளனர்.

இலங்கை அரசு அண்மைக் காலத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையை மனிதாபிமானமற்ற முறையில் அதிகரித்துள்ளது என்று குற்றம் காட்டிய முன்னணியின் பிரமுகர் ஒருவர் ஜெயவர்த்தனவின் அண்மைக்காலப் பேச்சுக்கள்பற்றியும், இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் பேச்சுக்கள்பற்றியும் திரு. பண்டாரியிடம் எடுத்துரைக்கப்போவதாகவும் கூறினார். [ரா]

---

# அகில உலகையும்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

### தத்துவஞானம்

பௌதீகம் உலகியலைவிளக்குகிறது போல் இயற்கையின் ரகசியங்கள் அனைத்தையும், காரணகாரியரீதியில், விஞ்ஞானம் விளக்கவல்ல காலம் ஒன்றுண்டா? மனிதனே இயற்கையின் முக்கியபகுதியாக இன்று காணப்படுகிறான். அண்டத்தின் அற்புதப் பகுதியே மனிதன்; இருந்தும் அவனறியாத ரகசியம் ஒன்று உண்டு; இந்த அற்புத உலகம், தானாக இயங்குகிறதா? அல்லது இயக்குபவர் ஒருவர் உண்டா?

### பாரதம்

தொழில் நுட்பத் துறையில் சிறந்து விளங்கும் அமெரிக்காவே இந்திய ஞானிகளையும் தத்துவ மேதைகளையும் ஆதரித்து வருகிறது. உலகின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி என்றநிகழ்ச்சிகளுக்குத்தத்துவ ஞானம் விளக்கமளிக்கிறதென்ற நம்பிக்கை; பாரதம் உலகுக்கு வழங்கிய நன்கொடை.

### விபத்தின் தாக்கம்

'நம்பிக்கையைக் கொண்டு' மனிதனின் வீரத்தை நிர்ணயித்துவிடலாம்' என்றுசொன்னவரும் எமர்சன் என்ற அமெரிக்க தத்துவஞானி. இரும்புத்தூண் போன்ற நம்பிக்கை கொண்டால்தான், விஞ்ஞானத்தில் மட்டுமல்ல, அரசியலிலும் நாம் முன்னேறலாம். ஆனால் இவ்வித நம்பிக்கை-அச்சம் அற்றநிலை, தூய இதயத்தில்தான் தோன்றும் என்பதே வேதங்களை வகுத்த இந்திய ஞானிகளின் கருத்து.

பேரிடர், துன்பம், தொல்லை நிறைந்த வாழ்வை தனிமனிதனோ தேசமோ சமாளிக்கும் ஆற்றல் பணிவென்னும் பண்பில் உருவெடுக்கும். பணிவில் விளையும் துணிவு பலமுடையது. ஆன்மபலம் பணிவுக்குக் காரணமாகிறது.

### அமெரிக்காவும் யாப்னாவும்

உலகில் பெருந்தேசம் அமெரிக்கா. மிகச்சிறிய நாட்டின் சிற்றூர் யாப்னா என்று சொல்லப்படும்; யாழ்ப்பாணம். இன்று அமெரிக்க மக்கள் படும்வேதனை போன்றதே யாப்னா மக்கள், யாழ். கோட்டைப்பகுதியிலிருந்து வந்த 'லோஞ்சர்' ஏற்படுத்திய வேதனை. அமெரிக்காவிற்கு ஒரு சலஞ்சர். யாப்னாவிற்கு ஒரு லோஞ்சர். இது விண்வெளி ஆராய்ச்சியின் இருநிலைகள். மக்கள் அழிந்தால் விண்வெளிப்பயணம். ஏவுகணைப் பரீட்சைகள் நிறுத்தப்படுமா?

### உலகப்பிரச்னை

இக்கேள்வி ஒருசிறு நாட்டை மட்டுமல்ல, கண்டத்தை மட்டுமல்ல, அகில உலகத்தின் பிரச்னை. உலகின் இரு பெரும் முதலாளிகள்; றீகனும் கொர்பச்சேவ் மட்டுமல்ல. கிழக்கில் ராஜீவும் ஜே ஆரும் மட்டுமல்ல. எல்லா நாடுகளின் தலைவர்களும் முகங்கொடுக்கவேண்டிய பிரச்னை.

---

## நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தென் இந்திய திருச்சபையின் இளைப்பாறிய பேராயர் சபாபதி குலேந்திரனின் நூல் தொகுப்புகளும், அவரின் சேவைக்கு நன்றியாக வெளியிடப்படும் கட்டுரைத் தொகுப்புக்களும் மதசமூகவியல் ஆய்வுக்கான கிறிஸ்தவ நிறுவனத்தினரால் இம்மாதம் 10-ந் திகதி திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில்வெளியிடப்படவுள்ளது.

பேராயர் டி. ஜெ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வெளியீட்டு விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராயர் யோகுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வார்கள். திரு. எஸ் ஜெபநேசன் நூல்களை அறிமுகம் செய்துவைப்பார். (பி)

---

## பலதகவல்கள் உள்ளடக்கிய ஒரு டயறி

அநேகமான டயறிகள் நமது நாட்டில் பொதுவாக ஆங்கிலத்தில்தான் அச்சடிக்கப்படுகின்றன, முற்றுமுழுதாகத் தமிழில் பூரண தகவல்களுடன் ஒரு டயறி இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ளதென்றால், நாம் அதில் ஆசைப்படுவதும் ஆர்வம் கொள்வதும் நியாயமே. இப்படித் தமிழில் அழகான டயறியை யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையினர் வெளியிட்டுள்ளனர்,

மிகவும் நல்ல காகிதத்தில், கவர்ச்சிகரமான முறையில் விற்பனைக்கு வந்துள்ள இந்த டயறியின் முதல் ஐம்பது பக்கங்களும் பாடசாலை மாணவர், சமயப்பற்றுள்ளோர், அரசியல் விரும்பிகள், சோதிட ஆர்வலர் என்று பல தரப்பிருக்கும் ஏராளமான விடயங்களை அள்ளிக் கொடுக்கிறது.

மாணவர்களுக்குத் தேவையான கணித வாய்ப்பாடுகள், இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்குரிய பெருநாட்கள், உள்நாட்டு, வெளிநாட்டு தூதுவர்களின் பெயர்கள், தேர்தல் தொகுதிகள், கட்சித் தலைவர்கள், அவர்கள் தம்முகவரிகள் என்பன மட்டுமல்ல; சோதிடத்தில் நாட்டமுள்ளவர்களுக்குத் தேவையான கிரக நிலைகளின் குறிப்புகள், பலாபலன்கள், தபால் தந்தி கட்டண விபரங்கள், பெருந்தெருக்களின் விபரங்கள், விவ

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# கிளிநொச்சி பிரயாணிகள் கொடிகாமத்தில் இறங்கினர்

[யாழ்ப்பாணம்]

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை 'யாழ்தேவி' மூலம் கிளிநொச்சிவந்தபிரயாணிகள் ஊரடங்கு அமுலில் இருந்த காரணத்தினுல் கிளிநொச்சியில் இறங்கவில்லை.

இப்பிரயாணிகள் யாவரும் கொடிகாமம் ரயில் நிலையத்தில் இறங்கினுர்கள்.

'யாழ்தேவி'யில் அநுராதபுரத்தில் ஏறிக்கொண்ட சுமார் 100 இராணுவத்தினர் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் இறங்கினுர்கள்.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் ஏற்றப்பட்ட சமையல் பாத்திரங்கள் ஆனையிறவு முகாமில் இறக்கப்பட்டன.

கிளிநொச்சி ரயில் நிலையத்தில் சுமார் 20 நிமிடமும் ஆனையிறவு முகாமில் சுமார் 25 நிமிடமும் 'யாழ்தேவி' தரித்துச் சென்றது. ஆனையிறவில் பிரயாணிகளின் பெட்டிகள் சோதனையிடப்பட்டன.

கிளிநொச்சி ரயில் நிலையம் வெறிச்சோடிக் காணப்பட்டது. பயணிகள் எவரும் காணப்படவில்லை. பரந்தன் இரசாயன தொழிற்சாலையும் வெறிச்சோடிக் காணப்பட்டது.

கிளிநொச்சி, பரந்தன் பகுதிகளில் மயான அமைதியாக காணப்பட்டது. சனநடமாட்டம் காணப்படவில்லை. ஆனையிறவு உப்பளத்திலும் சன நடமாட்டம் காணப்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து வ. பி. போ. ச. பஸ்களும், மினிபஸ்களும் பளைவரையுமே சேவையிலீடுபட்டன. வவனியாவிலிருந்து மாங்குளம் வரையுமே பஸ் சேவை நேற்று நடைபெற்றது.

'யாழ்தேவி' நேற்றுப் பகல் ஒன்றரை மணியளவில் யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பியது.

# இவர்களுக்குமீண்டும்பரீட்சை

[யாழ்ப்பாணம்]

ஆசிரியர் கலாசாலைகளில் இறுதிப் பரீட்சைகளில் சித்தியடையாவர்களுக்கு வருகிற ஏப்ரல் மாதம் மீண்டும் பரீட்சை நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1983ம் ஆண்டு டிசம்பர் மாதம் இறுதிப் பரீட்சையில் சித்தி அடையாதவர்களும் இதற்கு முந்திய ஆண்டுகளில் இறுதிப் பரீட்சையில் சித்தி அடையாதவர்களும், நூன சித்திஅடைந்தவர்களும் இவ் இறுதிப்பரீட்சையை எடுப்பதற்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை தாம் பயிற்சி பெற்ற ஆசிரியகலாசாலையூடாகவே அனுப்புதல் வேண்டும். விண்ணப்ப முடிவுதிகதி இம்மாதம் 10ந் திகதியாகும். மாதிரி விண்ணப்பப் படிவங்களைஆசிரியர்கலாசாலை அதிபர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

நூன சித்தி அடைந்தவர்கள் ஒரு பாடத்திற்கு பதினைந்து ரூபா கட்டணமும், மூன்று பாடங்களும் அதற்கு மேல் விண்ணப்பிப்போர் நாற்பது ரூபா கட்டணமும் செலுத்தவேண்டும். [ஐ]

# காயமடைந்தோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதி

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சிப் பகுதியில் ஹெலி கொப்டரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளவர்கள் விபரம்: திருமதி வடிவேல் பாக்கியம் [63 வயது], தர்மபுரம் திருமதி பால'சரஸ்வதி [40] கிளிநொச்சி பழனிச்சாமி [39] கிளிநொச்சி.

வவனியாவில் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த ஆர். முருகேசு என்பவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [ஐ]

## மட்டக்களப்பில்

# இன்று ஹர்த்தால்

[கொழும்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்க முஸ்லிம்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

லெபனுனில் நடந்த தாக்குதலை ஆட்சேபித்து ஹர்த்தால் நடத்துமாறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. தமிழ்மக்களையும் ஆதரவு வழங்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

பாலஸ்தீன மக்களுக்கெதிரான இஸ்ரேலியர்களின் தொடர்ச்சியான பயங்கரவாத நடவடிக்கைகளையும் ஜெருசலம் அல்-அக்ஸா பள்ளிவாசல் தாக்கப்பட்டதையும் கண்டிக்கும் முகமாகவே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

# 35 கடைகள் தீக்கிரை

[கொழும்பு]

மலைநாட்டில் நடந்த அசம்பாவிதங்களினுல் பல இடங்களிலும் சுமார் 35 கடைகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன. [ய]

# கிளிநொச்சிக்கு பெருமளவு ஆயுதப்படை

[வவனியா]

மாங்குளத்திலிருந்து நேற்றுக் காலை சுமார் 40 ஆயுதப் படையினரின் வாகனங்கள் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளன.

இந்த வாகனங்கள் நேற்று முன்தினம் வவனியாவிலிருந்து புறப்பட்டு மாங்குளம் சென்றதாகக் கூறப்படுகிறது.

இவ்வாகனங்கள் மெதுவாகச் சென்றதால் வவனியாவிலிருந்து நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சென்ற பஸ் மாங்குளத்திலிருந்து திரும்பி நேற்றுக் காலை 10 மணிக்கு வவனியாவிற்கு வந்தது.

# தமிழர் படுகொலை செய்யப்படுவதை பாரதப் பிரதமர் தடுக்கவேண்டும்''

## 'அமிர்' கோரிக்கை

(புதுடில்லி)

''இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனு இராணுவ மோதலுக்குத் தயாராகி வருகிருர் என்று அண்மையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கைகள் எடுத்துக் காட்டுகிறது.''

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் புதுடில்லி வந்து சேர்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் விமான நிலையத்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியல் மேற்கண்டவாறு கூறினுர்.

இலங்கை இனப்பிரச்னையில் பாகிஸ்தான் தொடர்பான விஷயங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்த திரு. அமிர்தலிங்கம், இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதம் வழங்குவதற்கும், இராணுவ பயிற்சிவழங்குவதற்கும் பலத்த கண்டனம் தெரிவித்தார்.

இன்றுள்ள நிலையில் பாரதப்பிரதமரிடமிருந்து எதனை எதிர்பார்க்கிறீர்கள்? என்று ஒருவர் கேட்டபோது, இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை உள்ளூர் மட்டத்திலும், வெளிநாடுகள் மட்டத்திலும், ஜனுதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுடன் தொடர்பு கொண்டு தடுக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

கிழக்கிலுள்ள தமிழ் மக்களை இலங்கை ஜனுதிபதி நசுக்குவதற்கு முயற்சி எடுத்து வருவதாகவும், இது உடனடியாகத் தடுக்கப்படவேண்டுமென்றும்' இதுபற்றி பாரதப் பிரதமரிடம் விபரங்கள் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் திரு. ஆர். சம்பந்தன் செய்தியாளர்களிடம் கூறினுர்.

# தாய்ப்பால் வங்கி!

[சென்னை]

மதுரையில் 'தாய்ப்பால் வங்கி' ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வங்கியில் சேகரிக்கப்படும் தாய்ப் பால் அனைத்தும்இலவசமாகவே விநியோகிக்கப்படுகிறது.

பாலை வழங்கியவர்களுக்கும் எதுவித கட்டணமும் வழங்கப்படுவதில்லை.

டாக்டர் நல்லசிவம் இதனை ஒருபெரும் சேவையாக மேற்கொண்டுவருகின்றூர். பிரசவத்தின் போது தாயார் இறந்த குழந்தைகளைக் கண்டு பிடித்து அக்குழந்தைகளுக்கு இப்பால் ஊட்டப்படுகிறது. [கெ]

# பலதகவல்கள்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

சாய உற்பத்திகள் சம்பந்தப்பட்ட குறிப்புகள், வெளிநாட்டு நாணயப் பெறுமதிகள் என்று பிரயோசமான பல விபரங்களை தங்களது டயறியில் அழகு தமிழில் தெரிவித்துள்ளனர் பூபாலசிங்கம் புத்தகசாலையினர்.

இது மட்டுமல்ல ஒவ்வொரு பக்கத்திலும் அடிப்பக்கமாக ஒவ்வோர் மாதத்தினது திகதிகளும், கிழமைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. கைக்கு அடக்கமாக, அழகான அம்சங்கள் பலநிறைந்து காணப்படும் இந்த டயறி எல்லோரது கையிலும் நிச்சயம் இருக்கவேண்டும்.

-ஐ. சண்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 3-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

# மரண அறிவித்தல்

## திருமதி தவமணி தம்பிப்பிள்ளை (இராசம்மா)

அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த தவமணி தம்பிப்பிள்ளை [இராசம்மா] காலமானுர். அன்னுர் காலஞ்சென்ற எஸ். தம்பிப்பிள்ளையின் [தெல்பொடைத் தோட்டம், பதுளை] மனைவியும், மகேஸ்வரன், டாக்டர் பரமேஸ்வரன், புவனேஸ்வரி, யோகேஸ்வரி, ஞானேஸ்வரன், ஜெகதீஸ்வரன், ராஜேஸ்வரன், ஈஸ்வரி ஆகியோரின் தாயாருமாவார். ஈமக்கிரியைகள் அராலி வடக்கில் இன்று [3 - 2 - 86) திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெறும்.

தகவல்: டாக்டர். பரமேஸ்வரன்.

[ஏ188)

## தெய்வானைப்பிள்ளை நாகநாதப்பிள்ளை

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த காலஞ்சென்ற இராமலிங்கம் நாகநாதபிள்ளையின் மனைவி தெய்வானைப்பிள்ளை காலமானுர். இவர், நாகமுத்து, யாதவராயர் [இளைப்பாறிய ஆசிரியர், வவனியா] பார்வதிப்பிள்ளை [இளைப்பாறிய அதிபர் மங்களம், உருத்திபுரம்] மருதையினுர் [பட்டயக் கணக்காளர், [U.K] ஆகியோரின் தாயாரும், சின்னத்தம்பி, மகேஸ்வரி [ஆசிரியை, வவனியா] இராமநாதன், அம்பலவாணர். கமலாம்பிகை [U.K] ஆகியோரின் மாமியுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் 3-2-1986 (இன்று) திங்கட்கிழமை இல. 74, புதிய குடியேற்றம் முகமாலையில் நடைபெறும்.

[C 530] தகவல்: நா. யாதவராயர்.

## திரு. அ. க. முருகேசு

வேலணை கிழக்கைச் சேர்ந்த, உடுகம பிரபலவர்த்தகரும், காலி சிவன் கோவில் முன்னுள் உபதலைவருமான, அ. க. முருகேசு காலமானுர். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும், முன்னுள் அரச பெருந்தோட்ட லிகிதர் திருநாவுக்கரசு, சண்முகசேகரம் (புதுக்குடியிருப்பு கிராம அபிவிருத்தி உத்தியோகஸ்தர்), வரதராசா ஆகியோரின் தந்தையாரும், திலகவதி, தங்கராணி, சிவஞானசுந்தரி (யாழ். கச்சேரி) ஆகியோரின் மாமனுரும், முரளீதரன், கிரிதரன், சிறீதரன், கலாதரா, லதா, சுமித்திரா, சூவிலதன், கல்பனு, சேரலதன், பிரகலதன், பிறேமலதன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக 3-2-86 (இன்று) திங்கட்கிழமை காலை 10-00 மணிக்கு வேலணை சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

(C 532)

## திருமதி பத்மாவதி சிவஞானரெத்தினம்

பத்மாவதி சிவஞானரெத்தினம் காலமானுர். இவர், ஓய்வுபெற்ற சௌக்கிய சேவை அத்தியட்சகர் டாக்டர் க. சிவஞானரெத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசவாசல் முதலியார் வ. பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மகளும், டாக்டர் பத்மினி காசிநாதன், டாக்டர் நளாயினி யோகு பசுபதி, கிருஷ்ணரெத்தினம் [U. K] திருமதி முகுந்தினி சிவபாதம், டாக்டர் சிறீராமரெத்தினம் [U. S. A.] ஆகியோரின் அன்புத் தாயாரும், டாக்டர் காசிநாதன் [சிங்கப்பூர்] டாக்டர் யோகு பசுபதி [நியூசிலாந்து] கீதா [U. K] டாக்டர் சிவபாதம் [M. O. H.] மன்னுர், ரஞ்சி [U. S. A.] ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னுரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்: டாக்டர் க. சிவஞானரெத்தினம், உரும்பிராய்.

[A 187]

## திருமதி இராசலட்சுமி சங்கரப்பிள்ளை

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி சங்கரப்பிள்ளை 01-02-1986 சனிக்கிழமை காலமானுர். இவர் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை (இளைப்பாறிய P. W. D. ஓவசியர்) அவர்களின் மனைவியும், கமலாவதி, பரிமளாதேவி அவர்களின் தாயாரும், பரமேஸ்வரன் (இலங்கை வங்கி, புத்தளம்), சிவகாந்தன் (காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் மாமியும், சற்குணராசா (சூவைத்), வசந்தமலர், ஜெயமலர், ஜீவமலர் ஆகியோரின் பெரியதாயாரும், இறங்கநாதன் (இளைப்பாறிய P.W. D. ஓவசியர்), காலஞ்சென்ற திருமதி சிவபாக்கியம் ஞானப்பிரகாசம், பதுமநாதன் (மலேரியாத் தடை இயக்கம் ஆய்வுகூடம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரியும், அஜந்தா (இலங்கை வங்கி, புத்தளம்), காண்டீபன், ஷர்மிளா அவர்களின் பேத்தியாருமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று [03-02-1986] திங்கட்கிழமை காலை 10 மணியளவில் வண்ணுர்பண்ணை [கலட்டி] சீனியர் லேன் 40/40A இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

C 524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org